# யாருக்கோ பெய்யும் மழை



JPL
C13868

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கோ பெய்யும் மழை

தாட்சாயணி

பொதுசன நூலகம்
23 AUG 2022
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

KOHA
JPL

13868 cc

286743

286743 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
894.8111

யாருக்கோ பெய்யும் மழை (கவிதைகள்)
தாட்சாயணி
முதற்பதிப்பு: 2021 மார்கழி
©தாட்சாயணி
நூல்,அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்:160
விலை: 450.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Yaruko Peiyum Malai (A collection of Poems)
Thadsayanee
First Edition: 2021 December
© Thadsayanee
Book design, Cover Designed by K.Bharaneetharan
Published by Jeevanathy, Kalai aham, Alvai
Pages:160
Price: 450.00
Printed at Baranee Printers, Nelliady.
ISBN: 978-624-5881-25-3

ஜீவநதி வெளியீடு - 206



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 AUG 2022

கல்வயல் வே. குமாரசாமிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றிகள்**

ஞானம், ஜீவநதி, தாயகம், கலைமுகம், மல்லிகை,
யாத்ரா, வியூகம்,
உதயன், சஞ்சீவி, தினகரன், நமது ஈழநாடு,
வாசகசாலை,நடு, சொல்வனம், பதாகை, அகழ்,
உள்ளம், ஊடறு, இதயசங்கமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## பொருள் புதிது, சுவை புதிது

இது உரைநடை யுகம். ஆயினும் கவிதை செல்வாக் கிழந்து விடவில்லை. இன்றும் அது இளவயதினரின் முதல் தெரிவாக இருக்கிறது. அவர்கள் கவிஞர்களாக விரும்பு கிறார்கள். பத்திரிகைகளின் ஞாயிறு மலர்களைப் பார்க்கும் போது பலர் கவியாக்கத்தில் தம் கைவரிசையைக் காட்ட முயல்வது காணலாம்.

இவ்வாரம்பக் கவிஞர்களிற் பெரும்பாலோர் பெண்கள் என்பது கவனிக்கத்தக்கது. கிழக்கில் அனார், ஸர்மிளா ஸெய்யித், யவனிகா, தம்பிலுவில் ஜெகா, வடக்கில் செல்வ மனோகரி, மாலா மதிவதனன் என பிரகாசிக்கும் பெண்கள் பலர்.

தமிழ்க்கவிதை நீண்டநெடும்பாதையில் பயணித்து இப்பொழுது புதுக்கவிதையென்ற தரிப்பிடத்தில் நிற்கிறது. ஃபிரான்ஸில் Verse libre என்ற பெயரில் அறிமுகமாகிய இக்கவிதை இயக்க முன்னோடிகளாக Walt whiteman, T.S.Eliot, Ezra Pound ஆகியோர் விளங்கினர். மரபு சார்ந்த யாப்பு வடிவங்களை நிராகரித்த இவர்கள் கவிதையை "தளைய விரிந்த கவிதை" எனலாம். பிச்சமூர்த்தி முதலியோர் இப்புதுக்கவிதையை தமிழுக்கு அறிமுகப்படுத்தினர். ஈழத்திலும் சேரன், ஜெயபாலன் முதலியோர் புதுக்கவிதையாளர்களாக பிரகாசிக்கின்றனர்.

நான் மேலே குறிப்பிட்டுள்ள பெண்கவிஞர்களும் புதுக்கவிஞர்களே என்பதைப் பதிவு செய்யவே இதைக் குறிப்பிடுகின்றேன்.

தாட்சாயணியை சிறுகதையாளராகவே நான் அறிவேன். இம்மாதத் தொடக்கத்திற்கூட, தனது "ஒன்பதாவது குரல்" தொகுதிக்கு அரச இலக்கிய விருது பெற்றவர் அவர். ஆனால் "யாருக்கோ பெய்யும் மழை" என்ற கவிதைத் தொகுதியோடு என்னை அணுகியது மகிழ்ச்சிகரமான வியப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆண்டுகளாக அவ்வப்போது தாட்சாயணி கவிதை எழுதியிருக்கிறார் என்பது புலனாகிறது. அது மட்டுமல்ல, ஆரம்ப காலத்தில் அவர் எழுதியவை மரபு சார்ந்த கவிதைகள் காலக்கிரமத்தில் அவர் புதுக்கவிதைக்கு மாறியுள்ளார் இதில் ஒரு புதுமையுமில்லை. பின்னாளில் புதுக்கவி வாணர்களாகப் புகழ்பெற்ற பலர், ஆரம்பத்தில் மரபுக் கவிதை எழுதியவர்களே.

இன்று ஊடகங்களில் முதன்மை பெறுவது காணாமற் போனோர் பற்றிய செய்தியே "தாய் மார்களின் கண்ணீர் மற்றும் குழந்தைகளின் கூக்குரல்கள் புதைந்தவர் நினைவுகளைத் தோண்டி எடுத்துக் கொண்டிருக்கின்றன" என்கிறார் கவிஞர். "அவர்களைக் கொண்டு வாருங்கள்!" என்ற ஒரு சந்ததியின் குரல் ஒலிக்கிறது.

பிரமிளின் "காவியம்" என்ற புதுக்கவிதை பிரபலமானது.

"சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது"

அபூர்வமான இந்தக் கற்பனை பலரை அருட்டியுள்ளது. தாட்சாயணியையுந்தான். விரிவாகவே அவர் எழுதுகிறார்:

"......... மலைகளின் உயரத்தை அளந்த சிறகு
பள்ளத்தாக்குகளின்
ஆழத்தையும் பார்த்து வந்திருக்கும்
சமவெளிப் பரப்புகளெங்கும் துழாவி
நாணற் புதர்களுக்குள்
நங்கூரமிட்டிருக்கும்...
மாலை மயக்கில் மரம் மீதிருந்து
இலைகளைக் கொஞ்சிக் கொஞ்சி
விழி செருகிக் கிளர்ந்திருக்கும்..."

என்று விரிகிறது "ஓய்வு" என்ற கவிதை.

விவிலியத்தில் சொல்லப்பட்ட சிருஷ்டிக் காலத்தை நம்முன் மீளக் கொணர்கிறது "தகிப்பு" என்ற கவிதை:

"மரணத்தின் துளி வாசனையை
காற்றுக்குள் புகுத்தி
மூச்சுக்குள் எட்டி எறிகிறது ஊழி
இரவிலிருந்து பகல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலிலிருந்து இரவு
மிக மிக நீளும் வெறுங்காலம்
அச்சத்துடனான நகர்வில்
ஆதாமின் தனிமை
ஒருமுறை புரள்கிறது
மூன்றடி தள்ளி நிற்கிறாள் ஏவாள்
இனி,
பேசுவதற்கும் முடியாது
எச்சிலிலிருக்கும் அமுதத்தை விட
விஷம் அதிகம்!"

உயிரற்ற ஒன்றை, ஓர் ஆளாக உருவகிப்பது Personification என்ற அணி. "தோழி! காதலனைக் காணப் போன என் நெஞ்சு அவன் வாயிலில், பனிக்குளிரில், கையே போர்வையாக நிற்கிறதே!" என்பது முத்தொள்ளாயிரத்துத் தலைவி கூற்று. அதுபோல, மணியோசையை உருவகிக்கிறார் தாட்சாயணி:

"…. எந்தக் காண்டாமணி ஒலியைக்
காற்று இழுத்து வந்து
என் முற்றத்தில்
கால்கடுக்க நிற்க வைத்தது
எந்தக்கன்றுக்குட்டி பிடித்திழுத்த
மணியோவெனப் பதைத்து
வாசலுக்கு வருகிறேன்
வரும் வழியில் வாகனத்தில் முட்டிய
செம்பசுவின் காயத்தின் நினைப்பு
என் மனதில்
உதிரமாய் வழிந்து கொண்டிருக்கிறது!"

இக்கவிதையில் கோயில்மணி ஆராய்ச்சி மணியாகிறது. கயிற்றைக் கௌவி இழுத்தது தாய்ப்பசு அல்ல; கன்று! பழைய செய்தி ஒன்று, புதிய சூழ்நிலையில், புதிய அர்த்தம் பெறுகிறது.

இதுபோலவே, ஆதிவாசி ஒருவன் ஊதும் புல்லாங்குழல் இசை, மேகத்திலிருந்து மழையை இறக்குகிறதாம்! வண்ணாத்தியின் சிறகுகளிலிருந்து திரட்டிய வண்ணங்களை ஆதிவாசி வானுக்கு அனுப்ப, வானவில்லை நோக்கிப் பறவைகள் சிறகடிக்கின்றன என்கிறார் கவிஞர்! (மாய இசை)

தூக்கம் பற்றிய படிமம் சுவாரஸியமானது;
"போர்வைக்குள் உறைகிறது தூக்கம்
உள்ளே எழுத்து கூத்தாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அனுமதி என்று கத்தி
ஆர்ப்பாட்டம் செய்து விட்டு
இப்போது அமைதியாய் நாடகம் போடுகிறது!
எடுத்த புத்தகத்தை
மூடித்தொலை என்று திட்டி
விழிகளைப் படக்கென்று அடித்துமூடி...
அமைதியாய்க்கிடக்கிறது தூக்கம்!"

இது தண்ணீர்ப்போத்தல் யுகம் 1984 இல் France இல் ஓர் உணவுச் சாலையில் சாப்பிட உட்கார்ந்த போது, பரிசாரகன் தண்ணீர்ப் போத்தலைக் கொண்டு வந்து வைக்க, அதிர்ச்சி அடைந்த அனுபவம் எனக்குண்டு. உரும்பிராய், இணுவில், திருநெல்வேலி என என் அயலில் கிணற்று நீரை அள்ளிக் குடித்த காலம்! ஆனால் இன்று தண்ணீர் வணிகன் ஆற்று நீரைப் போத்தலில் அடைக்க ஆறு வற்றி வறண்டு கிடக்கும் காட்சியைக் கவிதையாக்குகிறார் தாட்சாயணி!

நவீன வாழ்க்கையில் மனிதன் முகமூடிகளை அணிய வேண்டியிருக்கிறது. "வீட்டில் ஒரு முகம், வேலை செய்யும் இடத்தில் ஒரு முகம், விருந்தயரும் வேளை ஒரு முகம், தெருவில் ஒரு முகம் என முகங்களை அணிந்து பழகி என்னால் இப்பொழுது இயல்பாகச் சிரிக்க முடியவில்லை!" என்கிறான் ஒரு நைஜீரியக் கவிஞன். தாட்சாயணியின் "முகமூடிகள்" சொந்த முகம் இழந்த நவீன மனிதனைச் சித்திரிக்கிறது.

முடிவான ஒன்று: "ஒடுக்கம்", "கிழிந்த இதயம்", "சாளரங்கள்", "வதைகாலம்", சொல் தீண்டிய மௌனம்", "இரண்டாவது மரணம்" முதலிய பல கவிதைகள் பெண்களைப் பற்றியவை. பெண்களுக்கு வாழ்க்கை முட்படுக்கையாக இருப்பதை உணர்ந்து அதிர்ச்சியடைகிறேன். பூமியின் ஒரு வெடிப்புக்காகக் காத்திருக்கும் சீதைகளாகவா பல பெண்கள் வாழ்கிறார்கள்! இவ்வாழ்வின் Positive ஆன பக்கங்களையும் கவிஞர் பார்க்க வேண்டும். வித்தியாசமானதொரு படைப்பைத் தந்த கவிஞரை வாழ்த்துகிறேன்.

**கவிஞர் சோ.பத்மநாதன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கவிதை எப்போதும் என்னை வசீகரித்துக் கொண்டே யிருக்கிறது.

பன்னிரண்டு வயதில் "எங்கள் ஊர்" எனும் பெயரில் முதல் கவிதைக்கான அச்சாரத்தைப் போட்ட நினைவு இருக்கிறது.

1992 இல் பி.பி.சி இளம் தமிழ்க் கவிஞர் தேர்வில் ஆறுதல் பரிசு. அதைத் தொடர்ந்த அகில இலங்கைக் கம்பன் கழகக் கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு, எனப்பாடசாலைக் காலத்தின் இறுதிப் பருவங்களில் கவிதைப் பரிசுகளால் அடையாளப்படுத்தப்பட்டேன்.

பி.பி.சி கவிதைப் போட்டியின் முடிவுகளால் சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதனால் இனம் காணப்பட்டேன். அவரது ஈழ வருகையின் போது அவரைச் சந்தித்ததன் விளைவாக அவரது ஈழச் சிறப்பிதழில் என் கவிதையொன்று பிரசுரமாகிற்று.

எனினும், சிறுகதைக்குள் நுழைந்த பிறகு, கவிதைக்கு என்னை முழுமையாக ஒப்புக் கொடுக்க முடியாமல் போயிற்று. கவிதை மீதான தீராத விருப்பினால் இடைப்பட்ட காலங்களில் இடைவெளிகளோடு எழுதிக் கொண்டுதானிருந்தேன். ஆனால், ஒருபோதும் நான் எழுதிய கவிதைகள் குறித்தான திருப்தி எனக்கு ஏற்பட்டதேயில்லை.

ஒவ்வொரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்ட பிறகும், அடுத்தது கவிதைத் தொகுதி தான் எனத் தோன்றும் எண்ணத்தை என் கவிதைகள் மீதான அதிருப்தி குலைத்துப் போட்டது. கவிதை ஒரு இளவரசி போல நான் அணுக முடியாத் தூரத்தில் எப்போதும் இருப்பதாகவே எனக்குத் தோன்றிக் கொண்டிருந்தது.

எழுதிய கவிதைகள் எங்கெங்கோ சிதறிக் கிடந்தன. எனது கவிதைகளை நானே திரும்பிப் பார்க்கவில்லை.

வாழ்க்கை ஓய்வொழிச்சலின்றி என்னை எங்கெங்கோ இழுத்துச் சென்று கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத கோவிட் நோய்த்தொற்று பதின்நான்கு நாள் களுக்கு என்னை நாலு சுவர்களுக்குள் முடங்க வைத்தபோது, கவிதை இளவரசி சாவதானமாய் என்னோடு பேசத் தொடங்கினாள்.

இதுவரைக்குமான எனது கவிதைகள் எங்கே?

மனது பதறத் தேடத் தொடங்கினேன்.

இதுகாலவரையில் எழுதித் தீர்த்த கவிதைகளை வடி கட்டியெடுத்தேன்.

எழுத்தின் அலைவரிசையில் எனக்கான முதல் அங்கீகாரம் கவிதையல்லவா?

இத்தனை ஆண்டுகளிலும் யாருக்காகவோ பெய்து கொண்டிருந்த மழைத்திவலைகளில் என் கரங்களில் அள்ள முடிந்தவற்றை அள்ளியெடுத்திருக்கிறேன்.

அவற்றைப் பருகும் போது உங்களுக்கு மழையின் சுவை கிடைப்பின் என்னைப் பாக்கியசாலி என்பேன்.

இந்தக் கவிதைகளைத் தொகுத்தபின் அவற்றுக்கான முன்னுரையை கவிஞர் சோ.ப அவர்கள் வழங்கியிருக்கிறார். வெறும் உளறல்கள் கவிதை எனும் பேரில் அமைந்திருந்தால் அவற்றை நீக்கி விடுவதற்கு அவருக்குப் பூரண உரிமையை அளித்திருக்கிறேன். அவரது நேரத்தை இக்கவிதைகளோடு பகிர்ந்து கொண்டமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இத்தொகுப்பிற்கான பதிப்பினை ஏற்றுக் கொண்டு சிறப்பான முறையில் அட்டை வடிவமைப்பையும் அமைத்துத் தந்த ஜீவநதி பதிப்பகத்திற்கும், பதிப்பாசிரியர் க. பரணீதரனுக்கும் என் கவிதைகள் சார்பில் நன்றி கூறுகிறேன். கவிதைகளுக்கான களங்களை நல்கிய பத்திரிகைகள், சிற்றிதழ்கள் முக்கியமாக ஆரம்பகாலக் கவிதைகளை வெளி யிட்ட இலங்கை வானொலி இதய சங்கமம் நிகழ்ச்சி போன்றவையே எனக்குள்ளேயிருந்த கவிதைகளை வெளியே இழுத்து வந்தவை. அவற்றுக்கான நன்றிகளை வெறுமே வார்த்தைகளில் சொல்லி விட இயலாது. மற்றும் என் குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இக் கவிதைத் தொகுப்பிற்கான ஆழ்ந்த ஒத்துழைப்பு இருக்கிறது. அவர்களுக்கும் என் நன்றி.

இனி, யாருக்கோ பெய்து கொண்டிருந்த இந்த மழையின் குளிர்ச்சிக்குள் உங்களை நனைய அழைக்கின்றேன். வாருங்கள்.

**தாட்சாயணி**

**(திருமதி. பிரேமினி பொன்னம்பலம்)**

thadsayanee@gmail.com

**பெரிய அரசடி வீதி,**

**சங்கத்தானை, சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

மலர்


1. அதிகாரம்
2. அந்த நாள்
3. அப்படியே ஆகுக
4. அவர்களைக் கொண்டு வாருங்கள்
5. அனல் ஒளி
6. உத்தரம்
7. ஏவாளின் புன்னகை
8. ஓய்வு
9. கசை முள்
10. கற்சிலை
11. கனவின் மீதம்
12. கைவிடப்பட்ட நிலம்
13. சாத்தானின் நாவு
14. சாலை போடுபவன்
15. சொற்கள் தெரிந்தவன்
16. தகிப்பு
17. தீட்டின் நிறம்
18. தீண்டுவாரற்ற சடலங்கள்
19. நீலமென்சிறகு
20. பழிச்சொல்
21. பால்யம் தொலைத்தவள்
22. புறப்படல்
23. மணியோசை
24. மயான வட்டம்
25. மாய இசை
26. முரண்
27. மூடப்பட்ட நகரம்
28. செவ்வரத்தை
29. மூன்று திசைப்பயணம்
30. உயிர்த்தெழல்
31. ஒரு பொழுது
32. சாபம்
33. இடைவெளி
34. அலைவு
35. ஆற்றினைப் போத்தலினுள் அடைப்பவன்
36. ஆற்றினைப் போத்தலினுள் அடைப்பவன் - 2
37. ஆதிக்குரல் ஒன்று
38. நெருப்பெரியும் காலம்


முகை


39. சீதை
40. தனித்தவள் சாபம்
41. மிருதங்கத்தோடு குடித்தனம் நடத்துபவன்
42. மின்மினிகளின் இரவு
43. முடிச்சவிழ்தல்
44. ரசனை
45. நியாயசபை
46. கரையில் தேடும் சிறுமி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47.ஒரு ஊரின் சோகம்
48.குவளை நிறைக்கும் திரவம்
49.இரண்டாய் உடைந்தேன் அர்த்தநாரீஸ்வரரே!
50.வறள் நிலம்
51. தூக்கம்
52.வைரக் கற்கள்
53.முகமூடிகள்
54.மனதின் அழுக்கு
55.வார்த்தைகள் இழந்த வாழ்க்கை

**மொட்டு**

56.இரண்டாவது மரணம்
57.கேள்விகள்
58.சொல் தீண்டிய மௌனம்
59.நம்பிக்கைகள்
60.பிரயத்தனம்
61.வதைகாலம்
62.வாழ்வை உணர்தல்
63.விரல் பற்றி நடத்தல்
64.நினைவின் படர்தலில்
65.மழை அவிழ
66.கேட்காத கேள்விகள்
67.ஒற்றை ராத்திரியும் காற்றில் அலையும் மெழுகுச்சுடரும்
68.கூட வருதல்
69.பயம்
70.ஞானம்
71. காலத்திற்காய் இக்குறிப்பு
72.யுத்தமும் நானும்

**அரும்பு**

73.உதட்டின் சாவி
74.இரவிற் பெய்யும் மழை
75.உயிர்ப்பு
76.மனிதம்
77.சாளரங்கள்
78.மரணம்
79.கிழிந்த இதயம்
80.ஒடுக்கம்
81.அமைதி
82.ஹைக்கூ கவிதைகள்
83.இதயம் சபிக்கும் நாள்
84.சாதனை செய்து வா! சின்னவா!
85.நறுந்தமிழில் நயந்தெழுத வேண்டும்
86.கைக்குட்டை தொலைந்ததனால்
87.இன்றைய நாள்களிலே
88.தனியாய் நடப்பேன் நான் தொலைதூரப் படகாய்
89.அந்த நாள் ஞாபகம்
90.மீண்டும் ஒரு நாள் நிமிர்வேன்
91. என் கவிதை
92.மே ஒன்று வருகிறது
93.தாகம்
94.அந்தி மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்

13268 cc

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம்

அதிகாரத்தின் காலடி ஒன்றை
நான் வருகின்ற வழியில் பார்த்தேன்
அதிகாரம் என்பதே ஓர் துர்க்குறி
அது எளியவர் மீதான சாபம்
அடிமைகள் மீதான குதிச்செருப்பு
எளிய பெண்கள் மீது ஏவப்படும் அம்பு

அதிகாரத்தின் துர்க்குறி
ஒரு கழுகின் பார்வையாக
மேலே வட்டமிடுகிறது
அதிகாரம் மமதை பிடித்து அலைகிறபோது
அதன் இதழ்களில் நெளிகின்ற
இகழ்ச்சிப் புன்சிரிப்பை
நீங்கள்
எப்போதேனும் கண்டிருக்கக் கூடும்

சிவப்பு நட்சத்திரம் ஒன்று
வானில் மின்னும் போது
அரசனின் சிம்மாசனத்திலிருக்கும்
அதிகாரத்தின் மணிமுடி
வீழ்ந்து சிதறுமென்று
குடுகுடுப்பைக்காரனது குரல்
குலுங்கி அதிர்ந்து கொண்டிருக்கிறது

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள்

யுகமொன்றின் கடைசி இழையில்
அந்த நாள் தொங்கிக் கொண்டிருந்தது
அந்த நாளைச் சிலுவையில் அறைந்த போது தான்
ஓராயிரம் உயிர்களின் அணுக்கள் தோறும்
வலியின் குருதி படிந்தது
ஆணிகள் ஏறிய குருத்துடல் போலப்
பதறிக் கிடந்தது அந்த நாள்
வெளிச்சம் ஒரு துளியுமற்றுப் போய்
இரவின் கரு மூச்சே
முழுநாளிலும் அப்பிக் கிடந்தது
அமில மழையின் கரிந்த நாற்றம்
நாளின் இடுக்குகளிலிருந்து
பொசியத் தொடங்கிற்று
ஊழியொன்றின் அவலக்கூவல்
மலைகள், ஆறென எதிரொலித்து, எதிரொலித்து
நாளை முடிவிலி ஆக்கிற்று
யுகத்திலிருந்து தொங்கிய அந்த நாள்
தன் இழையை அறுத்துக்
கீழே விழுந்து
தற்கொலை செய்த பிறகு
மலைகளும், ஆறுகளும் சிவப்பாகியிருந்தன

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்படியே ஆகுக

ஒற்றைத்துணி போர்த்தபடி
சோர்ந்து அமர்ந்திருக்கிறாய்
கண்களில் தெரியும் வலியை
உன்னால் மறைக்க முடியவில்லை
குரல் வளையிலிருந்து எழுகின்ற
தாகத்திற்குத் தடையிட்டிருக்கிறாய்
ஆனாலும், தருவதை மறுக்காமல்
நீ பருக வேண்டித்தானிருக்கிறது
உனக்குப் பசி உணர்வில்லாவிட்டாலும் கூட
அவர்கள் தருவதை நீ உண்ண வேண்டும்
உனக்கொரு போர்வையை
அவர்கள் தான் கொடுத்தார்கள்
அது இல்லாமலிருந்தாலும், இருந்தாலும்
அதைப்பற்றி உனக்கொன்றுமில்லை.
அவர்களுக்கு
உன் உடலை மறைப்பதை விட
உடலிலிருக்கின்ற காயங்களை
மறைக்க வேண்டியிருக்கிறது
உனது தாகத்தை, பசியைத் தமது காமத்தை
மறைக்க வேண்டியிருக்கிறது
அதனால் அந்த ஒற்றைப் போர்வையை
அவர்கள் உனக்குத் தந்திருக்கிறார்கள்
ஆனால், நான் அறிவேன்
உணர்வற்ற அந்தக் கண்களில்
என்னால் அறிய முடிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இல்லாமல் போயிருந்தால்
தோற்றுப்போன உன் கண்களின் காயத்தை
உலகம் பார்த்திருக்காதென்று,
நீ ஒரு புகையைப் போலக்
கரைந்து போக விரும்பியிருந்தாய் என்பதையும்,
அந்தப் புகையிலிருந்தொரு நச்சுப்பதார்த்தத்தை
அவர்களின் நாசிக்குள் நீ
ஊற்றியிருக்க வேண்டுமென்றும்
நானும் தான் விரும்பினேன்
அது, உனதல்ல எனது துரதிஷ்டம்

ஆயுதங்கள் அற்ற காலத்திற்குத்
திரும்பியிருந்தாலும்,எப்போதும்
நான் நினைப்பது இதைத்தான்.
வரங்களை வழங்கும் கடவுள் ஒருவன்
எந்த மதத்தில் இருப்பானாகிலும்
ஒரு யுத்த களத்தின் இறுதியில்
கை விடப்பட்ட பெண்கள் மீது
கருணையைப் பொழியட்டும்
அந்தப் பெண்கள் நீராவியாகவோ,
புகையைப் போலவோ கரைந்து போகட்டும்
யுத்த காலத்தில் பிறந்ததற்கான
தண்டனை ஒன்று இருக்கத்தான் வேண்டுமெனில்
அது அப்படியே ஆகட்டும்
2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களைக் கொண்டு வாருங்கள்!

காலச் சுவரின்
தடிமனும், நீளமும்
இன்னும் அதிகமாகலாம்!

இறந்த காலத்தின்
வலிகள், வேதனைகள்
மறக்கப்படலாம்!
மறைக்கப்படலாம்!

அங்கே
கடந்தகாலத்தின் புதைவில்
உறங்கிக் கிடக்கின்றன
சில கேவல்கள்
மற்றும் மரண வேதனைகள்!

தாய்மாரின் கண்ணீர்!
குழந்தைகளின் கூக்குரல்கள் மட்டும்
இன்னும்
புதைந்தவர் நினைவுகளைத்
தோண்டி எடுத்துக் கொண்டிருக்கின்றன!

அவர்கள் எங்கோ இருக்கின்றார்கள்!
அவர்களை எம் கண்முன் கொண்டு வாருங்கள்!

காலங்களின் சுவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படித் தடித்துக் கொண்டு போனாலும்,
அந்தச் சுவர்களுக்குப் பின்னால்
தேடிக் கொண்டிருக்கும்
இந்தக் குரல்களின் ஓர்மம்!

“அவர்களைக் கொண்டு வாருங்கள்”
குரல்களின் அதிர்வெண் முதிர்கிறது!

அவர்களை எம்முன்
ஒரு தடவையாவது காட்டுங்கள்!

முதிய குரல்கள் தேய்ந்து மறைகின்றன!
மழலைக்குரல்கள் முதிர்ந்து அதிர்கின்றன!

“அவர்களைக் கொண்டு வாருங்கள்”

ஒரு சந்ததியின் குரல்
எப்போதும்
உரத்து ஒலித்துக்கொண்டே இருக்கிறது!
காலச்சுவர்களின்
தடிமனைத் தகர்த்தபடி!

2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல் துளி

துர்த்தேவதைகளின் சாபம்
மண்ணை வந்தடைந்த போது
அவள் சிசுவொன்றைப் பிரசவித்திருந்தாள்
அதன் மேனியில் படர்வுற்ற குருதியைத் துடைத்து
அவள் கையில் தாதி அதைத் தந்த போது
அவள் கண்கள் எங்கேயோ வெறித்திருந்தன
முலை சப்பிய சிறு உதடுகளில்
வெளிறிப்போன பால்துளிகள் வழிகையில்
நிறமற்ற கனவுகளின் அடிவாரத்தில்
நித்திய துக்கத்தின் ஆறு ஓடிக்கொண்டிருந்தது
இலக்கற்ற பார்வை
நதியாழங்களின் இரகசியங்கள் மீது
புனையப்பட்டிருந்த வசிய அணிகலன்களை
அறுத்தெறிந்து
வெறுமேனியளாக நிற்பதுபோல்
அவள் உணர்ந்த கணத்தில்
அவமானத்தின் கூர்க்கங்குகள்
இரத்தக் கீறல்களாயின
வசைகளின் மீதூர்ந்த பெருநெருப்பை
அணைக்கத் திராணியற்றவளாய்
குனிந்து சிசுவின் நெற்றியில் முத்தமிட்டபோது
பேரனல் ஒன்று அந்த நெற்றியில் திரண்டு
அவள் உதடுகளை சுட்டெரித்தது

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தரம்

சொல் தனது தீய செயலை ஆரம்பித்தது
"பிச்சைக்காரி" என அது
முதலில் விளம்பியதிலிருந்து
அவள் உடல் கூசத் தொடங்கியது
நான்கு சுவர் நடுவே
ஏதிலியாய் நின்றாள்
உடல் நடுங்க அவளது குரலும் நடுங்கியது
இறுதியிலும் இறுதியாய்
அவள் மீதான ஒழுக்கத் தூற்றலைக்
கையிலெடுத்துக் கொண்டது சொல்.

அறையில்
ஒரு மின்விசிறி இருந்தது
கொடியில் சேலை ஒன்று,
ஒரு முடிச்சு
உத்தரத்தில் இறுகத் தொடங்கியது

தீய செயலை ஆற்றிய சொல்
ஒரு மூலையில்
ஆறுதலாய் குந்தியிருந்தது
அதன் கண்ணீரில்
பரவியிருந்த துவர்ப்பினைக்
காறித் துப்பி விட்டு
ஓடியது,
சுவரிலிருந்து பல்லியொன்று
2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவாளின் இரவு

வாசனை கமழும் இவ்விரவு,
ஆதாமுக்கும், ஏவாளுக்கும்
பிரத்தியேகமாய் எழுதப்பட்டிருக்கிறது.
இரவும், குளிரும்
ஒன்றாய் இறுகும் வேளையில்
காமத்தின் கனல்
விண்மீன்களாய் சொட்டுகிறது
நுரை, நுரையாய்
ததும்பும் அலைகளிலிருந்து
இசை தனது விரல் சொடுக்கத் தொடங்குகிறது

கூடலின் நறுமணக் கூடையை
யாரோ கவிழ்த்துக் கொட்டிய பிறகு
அறைக்கதவு அசைகிறது
வாசனை கதவினூடு வெளியேறுகிறது
கடிக்கப்பட்ட அப்பிளின் எச்சில் வழியே
மெல்லிய சர்ப்பமொன்று
நெளிய ஆரம்பிக்கிறது.

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு

புள்ளி இறகொன்று
முற்றத்தில் வீழ்ந்து கிடந்தது
வானெல்லாம் அளந்த சிறகு
ஆயுள் கணக்கை எங்கு பார்க்க?

அந்தப் புள்ளிகளில் உறைந்திருக்கும்
அள்ள முடியாத வெயிலும்
அளக்க முடியாத குளிரின் திரவமும்

மலைகளின் உயரத்தை அளந்த சிறகு
பள்ளத்தாக்குகளின்
ஆழத்தையும் பார்த்து வந்திருக்கும்
சமவெளிப் பரப்புகளெங்கும் துழாவி
நாணல் புதர்களுக்குள் நங்கூரமிட்டிருக்கும்
கடல் நீளங்களைக் கடந்திருக்கும்
உயிருக்கான உத்தரவாதத்தைக்
காலகாலமாய்
அள்ளிக் கொடுத்திருக்கும்
மாலை மயக்கில் மரம் மீதிருந்து
இலைகளைக் கொஞ்சிக் கொஞ்சி
விழி செருகிக் கிளர்ந்திருக்கும்

இப்போது முற்றத்துக் குறுமணலில்
ஓய்ந்து கிடக்கிறது,
சாய்மணையில் படுத்திருக்கும்
தாத்தாவைப் போல
2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசை முள்

இரவுகள் ஒவ்வொன்றும்
கசையடிகளின் வலி தின்றன
அவள் ஒவ்வொரு இரவின்
நட்சத்திரங்களையும் தன் ஆடையில்
முடிந்து வைத்தபடி காத்திருப்பாள்
யாரேனும் ஒருவன் வருகிற போது
அவள் அந்த நட்சத்திரங்களை அவன் முன் விசிறி
ஒளி வட்டமொன்றைச் சிருஷ்டிக்க வேண்டும்
நட்சத்திரங்களின் ஒளி
அவள் மயிர்க்கால்களைக் கூச வைக்கிறது
அவன் தரும் காசில் தான்
அவள் குழந்தைகளின் பசி ஒழிந்திருக்கிறது
ஒவ்வோர் இரவையும்
அவள் ஒவ்வோர் கசையடிகளெனச்
சகித்துக் கொள்கின்றாள்
முதுகிலிருக்கின்ற கசையடித் தடங்கள்
குருதி விறால்களாகின்றன
கசையடியின் கடைசி நாளன்று
நட்சத்திரங்கள் காணாமலாகின
அவள் ஆடையில் எந்த நட்சத்திரமும் மீதமில்லை
வந்தவன்
அவளைத் திரும்பிப் பாராமலே போகிறான்
இப்போது கசையடித் தழும்புகள்
அவளிலிருந்து
உக்கிரமாய் வழிய ஆரம்பிக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலிலிருக்கின்ற மயிர்க்கால்கள் ஒவ்வொன்றும்
முள், முள்ளாகி
அவளைக் குத்துகின்றன
புரள முடியவில்லை படுக்கை குத்துகிறது
பகலின் வெயிலிலும் முட்கள்
இரவின் கருமையிலும் முட்கள்
மழையின் துளிகளிலும் முட்கள்
அவள் குரலெடுத்துக் கதற நினைக்கையில்
குரலொரு முள்ளாகி
அவளது தொண்டையைக் கீறுகிறது
சுனைக்குள், கடலுக்குள்
வானுக்குள், மண்ணுக்குள்
எங்கும் துருத்திய முட்களுக்குள்
அவளொரு முள்ளாக மாறித்
தன்னைத்தானே குத்திக் கொண்டிருக்கிறாள்

2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலை

ஓராயிரம் நாள்கள் கடந்தன...
இன்னும் அந்தக் கற்சிலை
கல்லாகவே கிடக்கிறது
ஓராயிரம் இலைகள்
பழுத்து உதிர்ந்து
அந்தக் கல்லைத் தழுவிச் சுரந்தன
எந்த மாற்றமும் இல்லை
ஓராயிரம் சொற்கள்
அந்தக் கல்லுக்கு
இரங்கல் பா எழுதின,
எதுவும் நடக்கவில்லை
ஓராயிரம், ஈராயிரம்... பல்லாயிரம்
காலம் கடந்து, கடந்து போயிற்று
அந்தக் கல் இன்னும் கல்லாகவே கிடக்கிறது!

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவின் மீதம்

கனவுகளின் ஊற்றிலிருந்து
பூத்துப் பெருகிய
அந்தப் பூவின் வாசனையில்
நஞ்சூறியிருந்தது

நிலவினைத் தொட்டு விட
நாங்கள் எத்தனித்த காலத்திலிருந்த
ஊழின் சீழ்
நிகழ்காலத்தின் கால்களில்
வழிந்து கொண்டிருக்கிறது

கனவென்று எதைச் சொல்ல...?
கைத்துப்போன
வரலாறுகளின் பாடத்திலிருந்து
கற்றுக் கொள்ளத் தவறிய பிறகும்.

இறகுகள் எரிந்து கொண்டே போகையில்,
கனவு, கனவெனச்
சாம்பரைக் குடித்துப் பழகினோம்

ஆற்றங்கரையில் பூத்துச் சிலிர்க்கும்
சின்னஞ்சிறு புற்களின்
புள்ளிப் பூக்களைப் போல,
கனவு எளிமையானதாய்
இருந்ததென்றாலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையுச்சி இடுக்குகளிலும்,
பள்ளத்தாக்குகளிலும்
தேடி அலைய வேண்டியிருக்கிறது,
கனவிற்குப் பலி கொடுத்த
காலங்களையெல்லாம்

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட நிலம்

ஊரெல்லையில் உயர்த்தி அடைக்கப்பட்ட
தகர வேலிகளுக்கு மேலாக
தேக்கம்பூக்கள் எட்டிப்பார்க்க ஆரம்பித்தபோது
பாம்பொன்றின் விசித்திர மணம்
முற்றத்தில் பரவத் தொடங்கியிருந்தது
படமெடுத்தாடிய நாகத்தைக் கனவில் கண்டதாய்
ஊரவன் ஒருவன் கூறிய போது
புலன்கள் யாவும் கூருற்றன
கை விடப்பட்ட நிலங்களில்
கறையான் ஏறிப் படர்ந்திருக்கும் என நினைத்தோம்
பாம்புகளின் புகலிடமாயிருக்கும் என
நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை
அங்கே இப்போது வளை முகடுகளான கோபுரங்கள்
வான் தொட்டுக் கொண்டிருப்பதாக சொன்னார்கள்
செங்காவிப் பூக்களின் நேசமற்ற வாசனை
நெடு மரமொன்றில் கிளம்பி
புகைகளாய் அலைவதாகவும்
எங்கள் வீடுகளின் முற்றங்களில்
புகை வீச்சம் அதிகமாயிருப்பதாகவும்
ஊரெல்லையில் விறகு வெட்டச் சென்றவர்கள் வந்து சொன்னார்கள்
காட்டுச் செடிகளைப் பற்றிக் கவலையேயில்லை
போகுமொரு நாளில் வெட்டியெறியலாம்
ஆனால் அரூபமான கரங்கள் வளர்ந்து கொண்டேயிருக்கின்ற
அந்த நெடு மரத்தின் விஷப்புகை பற்றித்தான்
யோசிக்காமலிருக்க முடியவில்லை

2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தானின் நாவு

ஆயிரத்தோராவது தடவையாக
சாத்தானின் நாவு
அசையத் தொடங்கிற்று

வசைமொழிகளின் இரைச்சல்
வாசலெங்கும்,

பனி படர்ந்த இலைநுனிகளும்
பெட்ரோல் பட்டதெனப்
பற்றியெரிந்த கணங்கள்

நூறு மலர்கள் ஒரேயடியாக
வாடிச் சாம்பின

நீ நெடுந்துயரின் உருவேறி
அக்கினிக் குஞ்சொன்றின் பொந்திடையே
வீசப்பட்டிருந்தாய்

நெருப்பின் வெக்கை
உனது குரலில்
புகையைக் கக்க வைக்கிறது

ஒரு துளி ஈரமேனும்
எங்கேனும் கசியாதோ,
எனும் உனது நப்பாசை காய்ந்து,

286743



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் தின்னும் நஞ்சாக,
சாத்தானின் நாவு அசையத் தொடங்குகிறது

கனவு பொசுங்கிப் பொசுங்கிப் போவதை
வார்த்தைகளற்று
வேடிக்கை பார்க்கிறது வானம்

2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலை போடுபவன்

புதிதாகப் போடுகின்ற தார் ஒழுங்கைக்காகப்
பீப்பாயில் கொதித்துக் கொண்டிருக்கிறது
தார்
கால்களில் சாக்குத்துணியைக்
காலுறையாகக் கட்டிக் கொண்டு
அனல் வெம்மைக்குள் நிற்கிறான்
திரள்கிறது தார் இருட்டுப் பசையென
வீட்டுக்குள்ளிருந்து வாசலுக்கு வருகிறாள்
ஒரு சிறுமி
வாசல் தூணோடு வேடிக்கை பார்க்கிறாள்
சந்தியில் கொதித்துக் கொண்டிருக்கும்
கரிய ஆவியின் திரள் புகை
அவள் கண்களைக் கூச வைக்கிறது
முகம் ஒரு நிலவு போலத் தெரிகிறது
தாருக்குள் புதையும் பிஞ்சுக்கால்கள்
அவன் கண்களைச் சஞ்சலத்துள் தள்ள
குச்சியெடுத்து விரட்டுகிறான் அவளை
கண்களில் தேம்புகிறது கண்ணீர்
இரக்கமில்லாமல் போகிறான் சாலை போடுபவன்

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்கள் தெரிந்தவன்

பூச்சொற்கள் மட்டும் பேசுமொருவனை
சில காலமாய் நான் கண்டேன்
வார்த்தைகளின் உக்கிரம் எதுவும்
அவனிடம் இருந்திருக்கவில்லை
அவன் பிறந்த போது தூவப்பட்ட மலர்களிலிருந்து
எந்த வண்டுகளும்
அவன் தலையைக் குடையாதிருந்தால் மாத்திரமே
இது சாத்தியமென நினைத்தேன்
அவனது உமிழ் நீரில் கரைக்கப்பட்ட சுவைகளுக்குள்
எந்த ஒரு விஷமும்
புகுத்தப்படவில்லை என்பதையும்
வாழ்க்கையின் நரக விளிம்புகளில்
அவன் கால் பதித்திருக்கவில்லை என்பதையும்
நான் உணர்ந்த வேளையில்
அவன் பூச்சொற்களை மட்டுமே
தன் வழியெங்கும் வீசிக்கொண்டு சென்றான்
இருந்தும்,
நான் ஒரு தரம்
அவன் வீட்டிற்குச் செல்ல வேண்டும்
அந்த வீட்டில் எந்தப் பரணிலேனும்,
தன் மனைவி மீதும் குழந்தைகள் மீதும் வீசவென்று
கருங்கல் சொற்களை
அவன் எங்கேனும் பதுக்கி வைத்திருக்கிறானோவென்று
பார்க்க வேண்டும்
2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகிப்பு

நெருப்பின் நடனத்தில்
தாவி அசைகிறது கடவுளின் நாவு.
நூறாயிரம் கிருமிகள் நெளிகின்றன.
சுரத்தின் வெப்ப அருகாமையில்
மனிதன் தவிர்ந்த விலங்குகள் யாவும்
குளிர் காய்ந்தபடி... சுகிக்கின்றன.

தகிக்கின்ற நெருப்பின் முன்
சுருள்கின்றான் மனிதன்

ஒரு அணைவும்,
சிறு தொடுகையும்
உறவிலிருந்து வெளியேறுகின்றன!

மரணத்தின் துளி வாசனையை
காற்றுக்குள் புகுத்தி,
மூச்சுக்குள் எட்டி எறிகிறது ஊழி.

இரவிலிருந்து பகல்...
பகலிலிருந்து இரவு...
மிக,மிக நீளும் வெறுங்காலம்.

அச்சத்துடனான நகர்வில்
ஆதாமின் தனிமை
ஒரு முறை புரள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றடி தள்ளி நிற்கிறாள் ஏவாள்!

இனி,
பேசுவதற்கும் முடியாது!
எச்சிலிலிருக்கும் அமுதத்தை விட
விஷம் அதிகம்.

2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீட்டின் நிறம்

அப்போதெல்லாம்
கொல்லைப்புறத்து வேலிக்கருகில்
தனித்துக் கிடக்கும் ஒரு கொடி

எங்களது உடுப்புக்கள் எதையும்
அதிலே காயப் போடுவதில்லை

அந்தப் பக்கம் போகக் கூடாதென்று ,
பாட்டி எங்களைப்
பயமுறுத்தி வைத்திருந்தாள்

அந்தக் கொடியில்
துணி காயும் வேளைகளில்
அம்மா
அடுக்களைக்குள் நுழைவதில்லை
வயிற்றைப் பிடித்து
ஒரு மூலையில்
ஒதுங்கியிருப்பாள்

அன்றைக்கெல்லாம்,
பெரியம்மா தான்
சாப்பாடு கொடுத்து
அனுப்பிய ஞாபகம்

சதுரம்,சதுரமாய் துணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்ட எப்படித்தான் பழகிக் கொண்டாளோ அம்மா...?

உலரப் போட்ட அந்தத் துணிகளிலிருந்து
அந்நாள்களில்
உதிர ஆறு ஓடியிருக்கக் கூடும்

இன்று நான் அடுக்களைக்குள் நிற்கிறேன்
நிலமெங்கும் குருதி ஓடுகிற பிரமை!
அதனாலென்ன?
எந்தத் தெய்வத்திற்கும்
தீட்டு ஏற்பட்டிருக்கப் போவதில்லை
ஏனென்றால்
அம்மனின் நெற்றியில் திரண்டிருப்பது
அவ்வளவு பெரிய
தீட்டின் நிறம் அல்லவா?

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டுவாரற்ற சடலங்கள்

தீண்டுவாரற்றுக் கிடந்தன சடலங்கள்...
உயிர் மூச்சைப் பிடித்து
நாங்கள் ஓடிக்கொண்டிருந்த போது,
தெருவிலே தீண்டுவாரற்றுக் கிடந்தன சடலங்கள்.
முகமிழந்து, நிறமிழந்து,
முழங்கைகள், கால் இழந்து...
தலை இழந்த முண்டங்கள் ஆகி,
வீதியெங்கும் சதைத்துண்டங்களாக,
தீண்டுவாரற்றிருந்தன அவை...

இரைந்து கொண்டிருந்த எமன்களை
வானம் அணைத்து வைத்திருந்தது.
எரிகுண்டுகள் பின்னாலேயே சீறிக் கொண்டிருந்தன.
ஓயாத சில கரங்கள்,
தீண்டுவாரற்றுப் போன அந்தச் சடலங்களை
வீதியோரக் குழிகளுக்குள்
போட்டு மூடிக் கொண்டிருந்தன.

தீண்டுவாரற்றுக் கிடக்கும் சடலங்களைப் பற்றி
நீங்கள் யாரேனும்
ஒரு கணமாவது நினைத்துப் பார்த்ததுண்டோ....?

நாங்கள் அறிந்திருந்தோம்,
யுத்தத்தின் அனல் மூண்ட நாட்களில்,
துரோகத்தின் நிழல் மூடிய காலங்களில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டுவாரற்றுக் கிடந்தன
ஏராளம் சடலங்கள்.
வெறுவெளிகளில் கிடந்த பள்ளங்களில்
குண்டுகள் வீழ்ந்து மூடியிருக்கும் சடலங்கள்...

மலகூடக் குழிகளுக்குள்,
நிர்ப்பந்தமாய் வீசி மூடப்பட்ட சடலங்கள்,

பதுங்குகுழிகளின் சரிவில்
சமாதியாக்கப்பட்ட சடலங்கள்...

நள்ளிராவின் இருண்மைக்குள்
அடையாளமற்றுத் துண்டிக்கப்பட்ட தலைகளோடு,
கம்பங்களில் கட்டப்பட்ட சடலங்கள்...

எனத் தீண்டுவாரற்ற சடலங்களின் கதை
சொல்லச் சொல்ல நீளும்.

இப்போதும்
தீண்டுவாரற்றுக் கிடக்கின்றன சடலங்கள்.
யாரிடமும், கொடுப்பதற்குமில்லை,
யாரும் ஏற்பதற்குமில்லை.

உறவுகளின் கதறலோலி மட்டும்
தூரத்தில் எங்கோ கேட்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் ஆத்மாக்கள்
சுழன்றடித்துக் கொண்டேயிருக்கின்றன.

வேண்டத்தகாத ஒரு பொருளாய்...
உடல்களை வீசியெறிந்து பற்ற வைக்கிறார்கள்.

சுவாலை எழுகிறது!
சுவாலை எழுகிறது...!

தீண்டத்தகாத சடலங்களெனினும்,
சுவாலை மட்டும்
அவ்வுடல்களைத் தழுவிக் கொண்டேயிருக்கிறது.

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீலமென்சிறகு

பிறகு...
நெருப்பை உமிழ்ந்த வானத்திலிருந்து
ஒரு சிறகு வீழ்ந்தது!

நீல மென் சிறகிலிருந்த புள்ளிகளிலிருந்து,
எந்தப் பறவையினுடையதும்
அடையாளம் இல்லை!
குயிலின் குரலிலிருந்து
அந்தச் சிறகு உற்பவித்திருக்கலாம்...!
நரை நிறத்துப் பளிங்கென அது
ஒளிர்ந்து, ஒளிர்ந்து நிறைந்தது!

நீ எனைப் பிரிந்து போயிருந்தாய்!

அந்த சிறகு காற்றில்
அலைந்து, அலைந்து
என் ஒவ்வொரு அணுவையும் தழுவியது...!
என்னிடம் வந்து சேர்ந்த அந்த சிறகை
குழல் ஊதிக் கொண்டிருந்த சிறுவன்
பறித்துக் கொண்டான்!

ஒரு தீச் சொல் கீழே உதிர்ந்த போது
என் சிறகுகள் எரிந்தன!

முழுதாய் எரிந்த பிறகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்புகளால் மட்டும்
நிரம்பியிருந்தேன்!
சவர்க்காரக் குமிழி போலும்
பட் டென்ற உடைவு,
பலூனைப் போல
குத்தி உடைக்கவியலாது என்னை,
எனச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது

2021

13868 cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழிச்சொல்

மாந்திரீகத்தின் மர்ம இழைகளால்
பின்னப்பட்டு
மண்ணுக்கடியில்
காலகாலமாய் உறங்கிக் கொண்டிருந்த
பழிச்சொல் ஒன்று
விரோதத்தின் கூர்ப்பழுப்புக்களோடு மேலெழுந்தது
காக்கையொன்று அதிகாலைக் கருக்கலில்
குரலைத் தேய்த்துத் தேய்த்துக்
கூர் செய்த பிறகு
ஏதோ ஓர் இலை
யோசித்துப் பட்டென்று
காம்பு கழன்று விழுந்த போது
அந்தப் பழிச்சொல் மரத்தில் குந்தியிருந்து
தனக்கான தருணத்தை
எதிர்பார்த்துக் காத்திருந்தது
மின்னற் பளபளப்பில்
இடி இடித்து ஓய்ந்தபின்
கதவு திறந்து வெளிப்பட்ட முதியவள்
படியில் சிந்தியிருந்த மழை ஈரத்தில்
சறுக்கிய கணத்தில்
வன்ம அடுக்கிலிருந்து உருவப்பட்ட
வாளின் எக்களிப்பென
கதவிடுக்கின் வழியே பாய்ந்து
அது உள் நுழைந்தது
2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்யம் தொலைத்தவள்

காலங்களைக் கடந்து சென்று
ஒரு சிறுமியை அழைத்து வந்திருக்கிறாய்
அவளது அகன்ற கண்களில் தத்தளிக்கின்றன மீன்கள்
தீக்குச்சியைப் பெட்டியில்
உரச வைக்கத் தெரியாதவளாக,
கிணற்றிலிருந்து ஒரு வாளித் தண்ணீரை
இழுத்துத் தர இயலாதவளாக,
அவள் இருந்தாள்
அவளது கண்களிலிருந்த கனவுகளெல்லாம்
நிலவொளி மீதான பித்தாக,
கதைகளில் உலவும் தேவதைகள் மீதான
ஈர்ப்பாக வளர்ந்தன
வெகுளித்தனமான அவள் நாசியிலிருந்து
உலகின் மீதான மொத்தப் பிரியமும்
வாசமாகிக் கிளர்ந்து கொண்டிருந்தது
ஒரு கூழாங்கல்லை எடுத்து
சலனமின்றி இருக்கும் குளத்து நீரில்
வீசியெறியவும் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தவள்,
தீபமொன்றை வாயினால் ஊதி அணைப்பது
குற்றமென எண்ணிக் கொண்டிருந்தவள்
கடைசியில் ஒரு கொலையைச் செய்தாள்
வன்மங்களின் பாசி படர்ந்திருந்த விழிகளோடு
கொலைக்கருவியில் குருதி வழிய
அவள் நின்றிருந்த கணத்தில்
நீ அழைத்து வந்திருந்த சிறுமியின்
கண்களிலிருந்து மீன்கள் பறந்து போகக் கண்டேன்
2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறப்படல்

நெடுந்தொலைவிலிருந்து
வந்திருந்தன நாவாய்கள்
நீ புறப்படத் தயாராயிருந்தாய்
ரோஜாக்கள், மல்லிகைகள் என
எதனையும் இனி எடுத்துச் செல்ல முடியாது
குறைந்த பட்சம் அவற்றின் வாசங்களையாவது
ஒரு குடுவைக்குள் அடைத்துக் கொண்டு போக
நீ பிரயத்தனப்பட்டாய்
கூட்டிலிருந்த குருவிகளைத் திறந்து விட்டாய்
அவையொரு நாளில்
ஏழு கடல் தாண்டி நீ இருக்கும்இடத்திற்கு
வந்து சேரும் என்றாய்
ஒரு பிடி மண் உன் ஞாபகத்திற்குத் தேவைப்பட்டது
நினைவுகளைத் துறப்பதற்கு யாரால் முடியும்?
இனியெப்போதும் வர முடியாது
எனத் தோன்றிய இந்த இடத்தினை
தெருவுக்கு வெளியே
ஒரு பார்வையாளனாய் நீ கடந்து போகும்
இந்தக் கணத்தினை அருளிய காலத்தை
சிறு வெறுப்போடு நினைவு கூர்கிறேன்

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணியோசை

வானத்திலிருந்து காற்றின் குரல் பற்றி
அந்த நெடுமணியின் ஓசையை
யாரோ இழுத்து வந்திருந்தார்கள்
முருகன் கோவிலிலிருந்து,
ஏதோ ஒரு தேவாலயத்திலிருந்து
எதுவாகவும் இருக்கட்டும்
தேவனுக்கோ, முருகனுக்கோ
கேட்கட்டுமென்று
யாரோ பிடித்திழுத்த
அந்தக் காண்டாமணியின் ஒலியைக்
காற்று இழுத்து வந்து
என் முற்றத்தில்
கால் கடுக்க நிற்க வைத்தது
எந்தக் கன்றுக்குட்டி பிடித்திழுத்த
மணியோவெனப் பதைத்து
வாசலுக்கு வருகிறேன்
வரும் வழியில் வாகனத்தில் முட்டிய
செம்பசுவின் காயத்தின் நினைப்பு
என் மனதில்
உதிரமாய் வழிந்து கொண்டிருக்கிறது

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயான வட்டம்

வேட்டைச் சிறகில் படிந்திருக்கின்றன
கோர அலகு கிழித்த
இரத்தத் துளிகள்
துளிகளைப் பூசிக் கொள்ளும் விருப்பம் இல்லாமலே
துளிகள் சிறகுகளில் அப்பிக் கொண்டன
அழியாத படிவு
எந்தக் குளத்தில் முழுகிக் கொண்டாலும்
கழுவித் தீர்க்க முடியாக் கோரம்
கழுகுகளுக்கென்றே ஆன சிறகுகள்
வானத்தைத் துண்டாக வெட்டி
அதற்குள் குஞ்சுகளை நசித்துக் கொல்லும் வெறி
ஒரு மந்திர வட்டம்
வானவில் வளைவல்ல
கருநிற வளையத்தில்
சுற்றப்பட்ட மயான வட்டம்
கழுகுக்கு வீடு
குதறப்படும் குஞ்சுகளின் சுடுகாடு
அந்தர வானத்தில்

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாய இசை

ஆதிவாசி ஒருவனின் குடிலுக்குள்ளிருந்து
கிளம்புகிறது,
மூங்கில் வாசனையுடனான கீதம்!

எந்தப் பாசாங்குமில்லாமல்
அந்தப் பாடலை இசைக்கிறான் அவன்!

மேகத்திலிருந்து இறங்குகிறது மழை!
ஈரக்குளிர்ச்சியில்
சிலிர்க்கின்றன பச்சைப் புற்கள்!

வண்ணாத்தியின் சிறகுகளிலிருந்து
திரட்டிய வண்ணங்களை
இசையில் நனைத்து
வானுக்கு அனுப்புகிறான்!

வானவில்லை நோக்கிச்
சிறகடிக்கின்றன பறவைகள்!

கார்காலத்தைச் சுவைக்கிறது காடு!

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண்

நுரைத்த மதுக்குடுவையிலிருந்த
சிறு புளிப்பாய் ஆகியிருந்தாய்
போகட்டும் விடு
நீ என் தித்திப்பாய் இருந்த காலம்
இனியெப்போதும் இல்லை என்றாயிற்று
உருகிச் சரிந்த பனித்திவலை ஒன்றின்
குளிர்ச்சியிலிருந்து
எனக்கான ஆடையை
நெய்து எடுத்திருக்கிறேன்
தேர்வுகள் எப்போதுமே
என்னுடையதாயிருந்ததில்லை
இப்போதேனும்
அதை உணர்ந்து பார்க்க விரும்புகிறேன்
முன்னெப்போதும் இல்லாத
முரணின் படிகளில்
ஏறத் தொடங்கியிருக்கிறேன்
அதிர்ச்சி உன் குரல்வளையை
இறுக்குகிற போது
என் படிகள் முடிந்து போயிருக்கும்

2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்ட நகரம்

தனிமையின் சாளரத்திலிருந்து
திட்டுத் திட்டாய் நிறங்கள் உதிர்கின்றன
மஞ்சளிலிருந்து விசிறப்பட்ட மகரந்தப்பொடிகளாகவும்,
நீலத்திலிருந்து சொட்டிய நட்சத்திரங்களாகவும்,
பின் வெண்மையிலிருந்து நழுவிய அமிழ்தத் துகள்களாக,
கடைசியில்,
சிவப்பிலிருந்து குருதித்துளிகள் உதிர, உதிர
கொஞ்சம், கொஞ்சமாய்
கழுத்தை இறுக்குகிறது அகோரனின் பிடி.

ராட்ஷசப் பருந்தொன்று
வானத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது,
இதுகால வரையில் கிடைத்திராத
பிரமாண்ட விருந்தொன்றிற்காக.

அந்தியை உரசிக்கொண்டு
எப்போதும் கேட்கின்ற ரயிலின் கூவல்
கண்களறியாக் குகைக்குள்ளே நுழைந்தபின்
திரும்பி வராமலே போனது.
இரவினைப் புணர்கின்ற
இயந்திர உறுமல்களோ இப்போதில்லை.

சப்தங்களற்ற உறைவிலிருந்தது நகரம்.
நீளச்சாலைகள் தோறும் மருந்திற்கும் ஆட்களில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவடைக்கப்பட்ட கோவிலுக்கு வெளியே நிற்கிறேன்.
உள்ளே சிலவேளை,
சிலைகள் பேசிக்கொண்டிருக்கலாம்.

மீன்கள் கரையொதுங்குகிறாற்போல்...
சடலங்கள் குவியல், குவியலாக
கரையொதுங்கிக் கொண்டிருக்கும்
காலத்தில் நிற்கிறேன்...

மிக அருகில் கடந்து போய்க் கொண்டிருக்கிறது,
குறி பார்த்து வீசப்பட்ட யமனின் கத்தி

2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வரத்தை

ஆரம்பத்தில் முற்றத்தில்
எந்தப்பூவும் பூத்திருக்கவில்லை
வெறிச்சோடியிருந்த முற்றத்தில்
நாள் பார்த்து, வளர்பிறை காலமொன்றில்
அவள்தான்
அந்த செவ்வரத்தையை நட்டாள்
முதலில் ஒன்றாக, இரண்டாக
பூத்துக் கொண்டிருந்தது
அவளுக்கும், அவள் புருஷனுக்குமென.
பின் குழந்தைக்கும் சேர்த்து
எண்ணி மூன்று பூப் பூக்காத நாள்களிலெல்லாம்
மனங் கோணியிருந்தாள்
மூன்று பூ,
மூன்று பேருக்கும்
போதுமானதாயிருந்தது
பிறகு,
கணக்கேயின்றிப் பூத்துச் சொரிகிறது
செவ்வரத்தை.
அவளது அன்பு
இந்த மூன்று பேரைத் தவிர
எங்கெல்லாம் பெருக்கெடுத்திருக்கக்கூடும்?
யார், யாருக்கென்று
அவள் அந்தப் பூப் பூக்கக்
கோரியிருக்கக் கூடும்?
2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று திசைப் பயணங்கள்

புரளும் அலைநுரை எழுதிய கவிதை
உன்னிடமிருக்கிறதா,,,?
என்னிடமில்லை!

நீயும் நானும்
ஒரு காலம் வாழ்ந்திருந்த
கடலின் சாலை...!

உதிரி உதிரியாய்
மணல் துகள்கள்
நம் காலடிக்கீழ் நெரிபட்டன!

பூவரசம் பூக்களைப் பறித்து
நீருக்குள் எறிந்தேன்!
ஒரு கணம் படகு!
மறுகணம் சிறு கல்லாய்
நீருக்குள் மிதந்து அமிழ்ந்தன...!

நாங்கள் பேசி முடிக்கவில்லை!
பார்த்துக் கொண்டிருந்தோம்!
பேச அவகாசமும் இல்லை!

உன் கால்களில் கட்டியிருந்த சக்கரம்
சற்றே ஓய்ந்த அவகாசத்தில்
நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
23 AUG 2022
மாநகர சபை
யாழ்ப்பாணம்

பூக்களை எறிந்து கொண்டிருந்தேன்!

அவை அலைந்தபடியே போய் விட்டன!
நம்மை ஒரு வார்த்தையும்
பேச விடாதபடி!

இப்போதும்
அந்த அலைகள் அலைந்தபடியிருக்கும்...!
நீயும் அலைந்தபடியிருப்பாய்!
நானும் அலைந்து கொண்டிருக்கிறேன்!

மூன்று கரைகளில்....
மூன்று திசைகளில்...
மூன்று வெவ்வேறான பயணங்களில்....!

2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்தெழல்

சாவைப் பழிவாங்கும்
வன்மத்தோடு தொடர்கிறது
வாழ்தலின் போராட்டம்...!

ஊழி உறிஞ்சிய
உயிர்களின் வட்டத்திற்குள்
துளிர்த்தெழுகிறது
மற்றுமொரு யுகத்தின் சுழற்சி...

வெளியெங்கும்
நிறைந்து துலங்கும்
விண்மீன்களின்
மௌனத்தினின்று கழன்று...
மீண்டும்
சலசலக்கத் தொடங்குகிறது
நின்று போன
பறவைகளின் குரல்...

கதியற்றுக் கலங்கினாலும் கூட
சிலிர்த்தெழுகிறது உள்மனம்
சாவின் குரல் கேட்டு!

அமைதியாய்
அடிபணிந்து போக
முடிந்ததில்லை ஒருபோதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு உயிரும்
எதிர்த்துப் போராடும் காலம்
இன்னமும் முடியவில்லை

எந்த வடிவத்தில்
சாவு பதுங்கி இருந்தாலும் கூட...
ஒருமுறை
உயிர்த்துளி பொங்கித்தான்
அடங்குகிறது...
யாரும் அறியாமல் என்றாலும்

2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பொழுது!

பனங்குருத்தோலைகளை முடைந்து
வெள்ளரிகள் பொதிந்து
நெடுநேரமாய்
காத்துக் கொண்டிருக்கிறாள் அவள்!

பொழுது ஏகிக் கொண்டிருக்கிறது!
சூழவும் பரந்திருக்கின்றன,
வெள்ளரி... பூசணி
மற்றும் வெங்காய விளைநிலங்கள்...!

அந்தப் பூவரசு முடக்கில்
வளையும் வீதிகளில்
சக்கரங்கள் தேய்ந்து கொண்டிருக்கின்றன!

வெயில் ஏறிக்கொண்டிருக்கிறது!
திரண்டு சிவந்த மண்ணுக்கடியிலிருந்து
ஒருபோது சர்க்கரைவள்ளி...
ஒருபோது பூசணி...
மந்திரம் போல
திரண்டு திரண்டு உருவாகுவதை
பார்த்துக் கொண்டேயிருக்கிறாள்...!

எப்போதும் அவளிடம்
வெள்ளரி முடைகள்
இருந்து கொண்டேயிருக்கின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக் குளிர்ச்சி
அடிப்பாதத்தைத் தீண்டும் வரை...
இந்த வெயில் காலம்
தீரும் வரைக்கும்...
வெள்ளரி விளைந்த நிலத்தருகே...
வெள்ளரி... வெள்ளரி எனக்
கூவிக் கொண்டிருக்கிறாள்!

நெருப்பு
அவள் கால்களின் கீழ்
அவிந்து கொண்டிருக்கிறது!

2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாபம்

கூட்டத்திலிருந்து பிரிந்து
தனியே அலைகிறது ஒற்றைப்புறா...!

கண்களின் கூரிய ஈரம்
யாரைக் காயப்படுத்துகிறது
என அறிவாயா...?

நீயும் நானும் பிரிந்த போது
பரிமாறிக் கொண்ட
மொத்தத் துயரின் பிம்பமாய்
அது தத்தித் தத்தி
அலைந்து கொண்டிருக்கிறது!

குதூகலித்த காலங்கள்
கனவுகளாய்த் தொடர்கின்றன...!

விதியிலிருந்து
விடுபடத் தெரியாத காலம்...!

தீக்கொழுந்துகளை
விழுங்கிய கண்கள்...!

குறுகுறுவென்ற பார்வை
இணைப் புறாக்களைச் சுட்டெரிக்கிறது!

தனித்த சாபம் ஒன்று
மரக்கிளையில்
ஊசலாடிக்கொண்டிருக்கிறது...!

2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைவெளி

நீ நிராயுதபாணியாய்
இப்போது என் முன் நிற்கிறாய்!

எந்த வார்த்தை ஆயுதமும்
உன்னிடமில்லை!

நான் எப்பொழுதோ
ஆயுதங்களை இழந்தவள்!

இருவரும் சண்டை போடுவதற்கில்லை!

ஒருவரை ஒருவர் நெருங்குகின்றோம்!

நமக்கிடையில் ஆயுதங்கள்
வானிலிருந்து வீழ்கின்றன!

எம் முன்
தாமே சண்டையிட்டுக் கொள்கின்றன!

நம்மை அவை ஒரு அடிதானும்
நெருங்க விடுகின்றதாயில்லை!

நீயும், நானும்
இன்னும்
நிராயுதபாணிகளாகவே நிற்கிறோம்!

நமக்கிடையிலான
இடைவெளி மட்டும்
இன்னும் கூடிக்கொண்டே போகிறது!
2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலவு !

எல்லாம் முடிந்து விட்டது!
இனி ஆவதற்கென்ன...?
எதுவும் அறியாதிருந்த
அவர்களின் பச்சைப்பிள்ளைப் பருவத்தை
ஏதோ ஒரு கழுகு
தன் கால்களுக்கிடையில்
கிடாவிக்கொண்டு பறந்தது!
கழுகின் பிடி நழுவி
எந்த மலைச்சரிவில் அது தவறி வீழ்ந்து
பிஞ்சுத் தலை முட்டிச் சிதைந்ததோ?

எல்லாமே முடிந்து விட்டது!
எந்த உணர்ச்சியும் மீதமில்லை!
எல்லாவற்றையும்
ஒரு குட்டிச் சீசாவுக்குள் போட்டுக்
கடலுக்குள் வீசியெறிந்தாயிற்று!

இனி எப்போதாவது
ஒரு சிறுவன்
அதைத் திறக்கக் கூடும்!

அப்போது
அதற்குள் அடைபட்ட
ஏக்கங்கள், ஆசைகள்
பூதமாய் வெளிப்படும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்கள், மதங்கள்,இனங்கள்
பேதங்கள்
எல்லாம் கடந்து...
எங்கோ ஒரு மனிதன்,
எங்கோ ஒரு சிறுவன்,
ஏதேனுமொரு மணல் திட்டு
அங்கே
அந்த ஆசைகள், ஏக்கங்கள்
பரவிப் படர்ந்து...

அதுவரைக்கும்,
பச்சைப்பிள்ளைப்பருவத்தை
இழந்து போன
பலபேரின் ஆத்மாக்கள்
அந்தரித்து அலைந்து கொண்டுதானிருக்கும்!

2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றினைப் போத்தலினுள் அடைப்பவன்

ஆற்றினை அண்டிய வெளிகளில்
நிறைய நண்பர்கள் ஆற்றுக்கு!

நாரைகளும் பறவைகளும்
விலங்குகளும் மனிதர்களும் என...

நீர்ச்சரங்களோடு
கை குலுக்கிய ஆறு
சதங்கைகளைக் கட்டியிருக்கும்
மாரி காலங்களில்...
வழிய வழிய ஓடும்...
சிரிக்கும்...
காற்றை எட்டி வம்புக்கிழுக்கும்...

மண் நிறைய... மடி நிறைய...
சோலை வனங்களைப் பூத்திருக்கும்...!
பெருகி ஓடும் காலங்களில்
வனப்பினைத் திருடி
ரகசியமாய் அணிந்திருக்கும்...!

கலகலப்பைச் சுமந்த ஆறு
இப்போது
காசு காய்க்கத் தொடங்கியிருக்கிறது!

ஆற்றினைப் போத்தலில் அடைப்பவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கரையினை
வந்தடைந்த போது...
ஆற்றின் முகத்தில்
திகில் படரத் தொடங்கியிருந்தது...!

ஒன்றொன்றாய்
அது தன் அணிகலன்களை
இழக்கத் தொடங்கிற்று!

இப்போது ஒரு சிறு நூலாய்
அடங்கிப் போய்க் கிடக்கிறது ஆறு!

ஆற்றினைப் போத்தலில்
அடைப்பவன் மட்டும்
அருகே குடில் அமைத்துத்
தங்கியிருக்கிறான்...!

2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றினைப் போத்தலினுள் அடைப்பவன் 2

ஆறு புகுந்த குடுவைகள்
வரிசையாய் ஒளிர்ந்து கொண்டிருந்தன!
வரிசையில் ஆறுகள் ஓடின...!
ஆறுகளின் பளபளப்பு
குடுவைகளுக்குள்
கொஞ்சம் அதிகமாகி விட்டதா..?

ஆற்றினைக் குடுவைகளுக்குள் அடைத்தவன்
எங்கே போய் விட்டான் ...?
வரிசையாய்
ஆற்றினைத் துண்டு துண்டாய் நிறுத்தியதை
ரசித்துக் கொண்டிருப்பானா...?

வயலுக்குள் வீழ்ந்த ஆறு
திரும்பியிருக்கிறது குடுவைக்குள்...!

ஒரே மாதிரியான
குடுவைகளைச் செய்தவன்...
ஒரே மாதிரி நிறங்களைக் கொணர்ந்தவன்...
மீன்களைச் சேர்த்து அடைக்க மட்டும்
மறந்து விட்டான்...!

2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்குரல் ஒன்று

ஒரு தாள லயத்தைச் சிந்தி வரும் மழை
முன்னெப்போதும் வந்திராதது...!
மழைக் குருவிகள் எங்கோ மறைந்து கொண்டன....!
இலைகளில் குழுமிய ஈர முத்துக்கள்
பேசிக் கொண்டேயிருந்தன...!

பருவகாலம் மாறிய ஒரு தருணத்தில்
ஈசல்கள் உற்பவித்தன!
சிதைந்து போன ஒரு புராதன நகரத்தின்
தெருவிலிருந்து ஒலிக்கிறது
யாழின் இசை கூட்டல்...

ஸ்வரங்கள் தேய்ந்திருக்கின்றன...!
சிதைவுகள் அப்புறப்படுத்தப்படுகின்றன!
எஞ்சியிருப்பது
தொல்பொருள் சின்னங்கள் மட்டுமே...!

கோட்டைக்குள்ளிருந்து எழுகிறது
பலநூறு ஆண்டுகளின் முன்பிருந்ததான
ஆதிக்குரலொன்று...!
ஆதியில் யார் இருந்த சரித்திரம்...?
யார் உழுத உழவு...?
யாரோ விதைத்ததை
இப்போது நாம்
அறுத்துக் கொண்டிருக்கிறோம்...!
2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பெரியும் காலம்

ஒரு கவிதையின் விசும்பலாய்
கால்மாட்டில்
கனத்துக் கிடக்கிறது துயர்

ஒளி முறுகிப் பாய்ந்து
இருள் விரட்டிய சாலைகளில்
வெற்றுப் பளபளப்பு

நிலவெழிலைப் பிய்த்துப்
பிழிந்தெடுத்து
உதறியெறிந்த காடுகளிலும்
கேட்கிறது ஒரு ஓலம்
உருவம் தவிர்த்து

தணல் தகித்த
பகல் பொழுது
விம்மித் தணிகிறது
தாகம், தாகம் என

நகம் கடித்துப் பார்த்து
யோசித்தபடியே
கலைந்து போகிறது
கருமுகில்
ஓட்டாதபடியே!
2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முளை

286743

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதை

ஒரு சாலையோர வளைவில்
நின்று கொண்டிருக்கிறேன்...!

மனிதர்களற்ற தெரு!
நேற்று...
அதற்கு முன் ஒரு நாள்
பல்லாண்டுகளுக்கு முன்னம்...
நான் நின்று கொண்டிருந்தேன்!

காற்று சலித்திருக்க வேண்டும்!
மூசி,மூசி அது வீசுவதைக் கேட்டபின்
ஓய்ந்து போனதையும் பார்த்தேன்!

அருகே விசாலித்த தீயின் கருகல் வாடை!
தீப்பிழம்பில் மண் துகளொன்று
ஒட்டிக் கருகிச் சுருண்டதைக் கண்டு
தூரப் பறந்த சாக்குருவி
விலகி ஓடிற்று!
அதன் குரல் வளர்ந்து பெருகி
காலச்சக்கரத்தில் நசுங்கிப் புரண்டது!

நான் நின்று கொண்டிருந்தேன்
அதே சாலையோரத்து வளைவு!

நேற்று நின்ற இடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கும் முன் ஒரு நாள்...!
அதற்கும் முன் இன்னொரு நாள் போல்...
எப்போதும் ஏதோ ஒரு வடிவில்
அது தனித்த காட்டுப்பாதை!
நான் நின்று கொண்டிருந்தேன்
நெடுங்காலமாய்...!

ஒளிக்கரைசலை வடிகட்டிய
மரங்களின் நிழல்கள்
என்னை விழுங்குகின்றன...!

இருளின் ஓசைக்குள்
பறவைச்சத்தங்கள் அமுங்கிப் போயின!

காலடிச்சத்தம்
ஒன்றுதானும் இல்லை!

அலுத்துப் போனபின்
பூமியின் ஒரு வெடிப்புக்காகக்
காத்திருக்கிறேன்!

2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தவள் சாபம்

அரவுகள் நெளியும்
வெளியாயிற்று எனதூர்...

வார்த்தைகள் ஒவ்வொன்றும்
அரவுகளின் நஞ்சில்
தோய்ந்தபடி வருகின்றன...

காலைவெளிச்சத்தின்
முதல் துளியில்
பாம்பொன்று தன்
மாணிக்கத்தை ஒளிரவைத்து
அதை விஷம் தோயப்
பிரதிபலிக்கின்றது
என் மேல்...!

பூவின் மகரந்தத்திற்குள்
மகரந்த இழைகளிலும் மெலிதாய்...
நெளிந்து கொண்டிருக்கும் சிறு புழு...
பாம்பின் வாரிசாக...

பனித்துளிக்குள் ஒளிந்திருக்கும்
விஷக்கொடுக்கு
ஒளியில் கரைந்து என்
விழிவழி சேரும் உடலில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிப்படர்ந்த வெயிலில்
கொட்டாவி விட்டுப் படுத்தபடி
உயிரின் ஈரத்தை உறிஞ்சும்
உலர்காற்று வார்த்தைகள்!

இன்னும்
அரவுகளின் நெளிவுகளால்
நிறைந்திருக்கிறது ஊர்...

2011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகத்தோடு குடித்தனம் நடத்துபவன்

வர்ணச்சொட்டுகளால்
வரைந்த கோடுகளால்
உன் மனதின் இருட்டை
மறைத்தாயிற்று

வசிய வார்த்தைகளில்
நீ பூசிக் கொண்ட
வாசனைத் திரவியங்கள்
உன் வக்கிரங்களை மறைக்க
வசதி செய்து கொடுத்தது

ஒரு விளையாட்டுப் பிள்ளை போல்
இன்னும் நீ
வலம் வருகிறாய்,
உன்னுள்ளே உறங்கிக் கிடக்கும்
மிருகத்தை
அறியாதவர்களிடையே

உன்னுள் உறங்கும்
மிருகத்தைப்
பார்த்தவர்கள் சொல்கிறார்கள்
மிகக் கொடிய மிருகம்
அதுவென்று

மிருகத்தைக் காணாதவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்கிறார்கள்
அப்படி ஒரு மிருகம்
இல்லவே இல்லையென்று

இடைப்பட்ட ஒரு சாரார்
உள்ளே ஒரு மிருகம்
உறங்குவதை உணர்ந்தும்,
அதைத் தட்டி எழுப்பிட
அச்சம் கொண்டே
காலத்தைக் கடத்துகிறார்கள்

மொத்தத்தில் நீ
மிருகத்தோடு
குடித்தனம்
நடத்திக் கொண்டிருக்கிறாய்

2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மினிகளின் இரவு

இருட்டு வார்த்திருந்த வெளியெங்கும்
தம் வெளிச்சப் பொட்டைத்
தேடியலைகின்றன மின்மினிகள்

மின்மினிகளின் இரசாயனங்கள்
இதுவரை கடந்த வெளிகளில்
கழன்று ஒழுகி
முடிவுற்றுப் போயின

இனி,
வாழ்வதற்கு
இல்லை ஆதாரம்
அவற்றிடம்

ஏதோ ஒரு கறுப்புயிராய்
அதுவும்
பறந்து கொண்டிருக்கிறது

அதன் நிறமும்
இன்னதென்று
கண்டுபிடிக்க இயலவில்லை
இந்த இருட்டில்

ஒளி ஒழுகும் இரவுகளில்
இனி நிலவிடம் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வாங்க வேண்டும்
வழியின் தடம் அறிய
கரிய பூதங்கள்
நிறைந்திருக்கும் இரவில்
ஒரு சின்னத்துளி மின்மினிக்கேன்
இரக்கமில்லாது போயிற்று
கடவுளிடம்?

நான், நீ, அவன்
வாழலாம் என்றால்
அதற்கு மட்டும்
எதற்காக
இந்த உரிமைப் பறிப்பு?

இருட்டு வார்த்த வெளியெங்கும்
தம் வெளிச்சப் பொட்டைத்
தேடியலைகின்றன மின்மினிகள்

2011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிச்சவிழ்த்தல்

வீறிட்டழுத நிலையிலிருந்து
விலகி
அதிரும் தொனிக்கு
வந்திருந்தன உயிர்க்கலங்கள்

அதிர்வு அடங்கும்
நொடிக்குக் காத்திருக்கிறது
வாழ்வு

கலங்கலான பிம்பத்திலிருந்து
எல்லாம் வெளித்தெரிந்து
இப்போது
தெளிவாகி விட்டது
எல்லாக் குழப்பங்களும்,
அனைத்தினது மூல காரணங்களும்,
முடிந்த முடிவுகளும்

வாழ்வின் வெளிச்சம்
மரணத்திற்கு
முந்தைய கணங்களில் தான்
தன் முடிச்சை அவிழ்க்கிறது போலும்

2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசனை

வானம் துளித்துளியாய்
கீழிறங்கும்
வாய்ப்பான நாளொன்றில்
அதனைப் பற்றிப்பிடித்து
ஏறிப் போக வேண்டும்
காலில் மிதிபடும்
அழுக்குகளினின்றும் விடுபட்டு!

காற்றிலிருக்கும் சலனங்களை
வாரிக்கொண்டு போகும்
மணியொலியோடு
மனம் விட்டுப் பேச வேண்டும்
தெய்வ ரகசியம் குறித்து

வார்த்தைகளைக் கரைத்து
ஆற்றில் வீசி,
அவற்றைத் தேடிக் கவ்வும்
மீன்களின் விளையாட்டை
ரசித்துக் கொண்டேயிருக்க வேண்டும்
நேரம் தொலைத்து

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயசபை

கண்ணகியின்
ஒற்றைச்சிலம்பின் பரல்கள்
தெறித்துக்கொண்டிருக்கின்றன
நீதிமன்றின் சுவர்களெங்கும்.....!
பல்லிகள் அந்தப் பரல்களைப்
பொறுக்கிக்கொண்டு
ஓடுகின்றன...
ஓடிச்சென்று கூரையின் இடுக்குகளில்
ஒழித்துவிட்டு
கிலுக்கி எறிகின்றன
வேறு பரல்களை...
அவற்றை ஏந்துவதற்கென்றே
வந்து சேர்கின்றன
இன்னும் சில...
கோவலன் கொலையுண்ட
செய்தியைக் காட்டிலும்
அதிர்ச்சியைத் தந்திடும்
சபையில்,
அவள் மானம் குறித்த கேள்விகள்...
அவள்மேல்,
ஒன்றொன்றாய் விழும் கற்கள்...
முடிவில்
ஊரைக் கொழுத்தியும் பயனிலை எனக்கண்டு,
பல்லிகளின்நஞ்சுண்டிறந்தாள் கண்ணகி!
2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரையில் தேடும் சிறுமி

நுரை சுழித்த
கடலின் கரையில்,
நீண்ட நாட்களாக
ஒரு சிறுமி வந்து போகிறாள்...!
அவள் எதைத் தேடுகிறாள்...?
சிப்பிகளும்,சோகிகளும்...
தேடும் வயதுதான்...
என்றாலும்,
அது குறித்த ஆர்வம்
அவளுக்கிருப்பதாய்
இன்னும் அறியப்படவில்லை!
அவள்
அலைகளுக்கிடையில்
நுரை பிடிக்க
முயற்சித்தாளுமில்லை!
நெடுந்துயர் விரவிக்கிடக்கிறது
அவள் விழிகளில்...
அவளறியாத எதையோ...
அவளிடமிருந்து யாரோ...
பறித்துவிட்டார்கள்...
அவளறிய...
அது என்னவென்று
தெரியவில்லை அவளுக்கு...
உலகில்
சிப்பிகளுக்கும்,சோகிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாக...
எதுவோ இருக்கிறதுதான்...!
அவளறிய...
அது என்னவென்று
தெரியவில்லை அவளுக்கு...

நுரை சுழித்த
கடலின் கரையில்
அவள் எதையோ...
தேடிக்கொண்டிருக்கிறாள் !

2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஊரின் சோகம்

நீள விரிந்த
நதியின் இடுக்குகளில்
கூடு கட்டிய கனவின் குரல்...
கனத்து வழிகிறது
மீட்சிக்கான வழி ஏதுமற்று...!
மரணம் கவிந்த தெருக்கள்
ஊரெங்கும்
தோரணங்களாய்த்
தொங்கிக் கொண்டிருக்கின்றன...!

இருட்டுக்குள்
கறுப்பொன்றே நிறமாகிப்போன
விரக்தியில்
நிறங்கள்
தற்கொலை செய்துகொண்டன...!
ஒளிப் பிசிறல்களைத் தேடும்...
ஒவ்வொரு தடங்களையும்
எட்டி மறைக்கிறது
கருமையின் செறிவு...!
திசைகளைத் தொலைத்த ஆட்காட்டி
தன் குரலைத் தானே
பின்பற்றி அலைகிறது!
இருளின் திரட்சிக்குள்
வரி வரியாய் உலர்கிறது...
காற்றின் மென்னிழைகள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகை உமிழ்ந்துருளும்
வலிய சக்கரங்களின் கீழ்
நடுநடுங்குகிறது...
பூமியின் தேகம்!
நகரின் இரைச்சலுக்குள்
அமுங்கிக் கேட்கிறது!
தன் சுயத்தினை
மெல்ல மெல்ல இழந்து கொண்டிருக்கும்
ஒரு ஊரின் கேவல்!

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவளையை நிறைக்கும் திரவம்

மழைப் பொழுதொன்றின்
தேனீர்க்கோப்பை
நான்!
சூடாக நிரம்பியிருந்தேன்!
பருவங்கள்
என்னை
மாற்றியமைத்தன...!
நீ என்னைப்
பனித் தேசத்தின் மதுக்குவளை
ஆக்கியிருக்கிறாய்!
தேன் வண்ணத் திரவத்தால்
மூடுண்டிருக்கிறேன்!
எனக்கொரு கௌரவம்
கொடுத்ததாய் எண்ணி...
ஒளிரும் திரவம்
பளபளத்தசைகிறது என்னுள்!
நான் தேனீரால்
நிறைக்கப்படுவது
இனி,
என் வசத்தில் இல்லை!
உனது தாகம் தீர்க்க,
நீ கேட்கும் வேளைகளில்...
கேட்கும் திரவங்களால்
நிரப்பப்படுவேன் நான்!
எனது கோப்பையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது விருப்பத்திற்கு
எப்போது இனி என்னால்
நிரப்பவியலும்...?
நிரம்பிய குவளையின்
மீந்திருக்கும் சிறு வெளியில்
இப்போது எனதுயிர்
ஓடித் திரிகிறது...!
தயவு செய்து,
அந்தச் சிறிய இடைவெளியையும்
உன் மூச்சுக் காற்றால்
இட்டு நிரப்பிவிடாதே!
அங்கே தான் இருக்கிறது!
நான் இழந்த
மழைப் பொழுதின் தேனீர் வாசனையும்...
கூடவே என் உயிரும்!

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாய் உடைந்தேன் அர்த்தநாரீஸ்வரரே !

மனதுள் மலர்ந்த
மழைப்பூக்கள்
உதிர்ந்து விடக் கூடிய அளவு
வார்த்தைகளை இறைக்கிறாய்!

உனது கண்ணாடி முகம்
பொசுக்கென்று
உடைந்து போன அதிர்வில் நான்...!

உனது மனதின்
விகாரம்
தெரிந்த போது
அடங்கா முகாரியுள்
வீழ்ந்தேன்!

உனதிருப்பின் அர்த்தம்
இன்னமும் புரியாமல்...
சுரண்டிக் கொட்டிய
வேதனைகளின் உராய்வில்
தீய்ந்து போகிறேன்...!

எனது ஊகங்களுக்கூடாக
உன்னை ஊடறுத்துப் பார்க்கிறேன்!
அப்படியும் நீ
செத்துப் போகவில்லை மனதுள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது கைத்த நினைவுகள்
கசந்து வழிந்த பின்னரான
ஆறுதலான கணமொன்றில்
உன்னைப் பற்றி
யோசிக்கிறேன்!

எதுவுமில்லை!
எதுவுமேயில்லை!
சிரித்தபடி நிற்கிறாய்
உயிருள்!

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறள்நிலம்

குடங்கொண்டு
அலைகின்றோம்
அமிழ்த நீர் தேடி ...
எங்குமில்லை அமிழ்தம்...
இந்த நகர வெளியின்
சாக்கடைத் தண்ணீரை
உற்பவிக்கக் காரணர் யார்?
உன்னவரா...?
என்னவரா...?
எடுத்தோம்
நிலத்தடியின் அமுதத்தை!
உறிஞ்சி உறிஞ்சி
வயிறு வெடிக்கும்வரை
குடித்தோம்!
இப்போது...
வறண்டு கிடக்கிறது
நிலத்தின்மடி!
நீயும் நானும்
எம் பின்னவரும்
குடம் கொண்டு
அலைகின்றோம்
அமிழ்த நீர்தேடி!

2011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம்

போர்வைக்குள் உறைகிறது
தூக்கம்!
உள்ளே எழுந்து கூத்தாடி
தன்னை அனுமதி
என்று கத்தி
ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு
இப்போது அமைதியாய்
நாடகம் போடுகிறது!
வெளியில் பார்க்க
ஒரு சாது போல்தான் இருக்கிறது!
இருந்தாலும்
இதற்கு முதல்
அதன் அட்டகாசத்தை
என்னவென்று சொல்வது...?
எடுத்த புத்தகத்தை
மூடித்தொலை என்று திட்டி...
சூழலைக் கிரகித்த
விழிகளைப்
"படக்"கென்று அடித்துமூடி...
பாயைக் கொண்டுவா...
தலையணை வேண்டுமென்றுஅடம்பிடித்து...
இப்போது ஒன்றுமே
தான் கேட்காததுபோல
அமைதியாய்க்கிடக்கிறது
"தூக்கம்"
2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரக்கற்கள்

இருப்பிலிருந்து தூக்கி
வெளியே எறியப்பட்டேன!
பல சொற்கள் என்னைப் பந்தாடின!
பல சொற்கள் என்னை நகையாடின!
எனினும் என் சொற்கள்
மௌனித்தேயிருந்தன!
என் சொற்கள் வைரக்கற்கள்...
ஒன்றையேனும் எடுத்து
நான் வெளியில் எறிந்து விட முடியாது!
வெறுங்கற்களான
சொற்களை அவர்கள்
அப்படித்தான் எறிவார்கள்...!
எனது சொற்கள்
வைரக்கற்கள்...
எப்படி “விசுக்”கென
எறிந்துவிட முடியும்!
அவற்றைப் பெறுவதற்கென்று
“பண்பட்ட” மனிதர்கள்
வருவார்கள்!
அதுவரைக்கும் அவற்றை
நானே பத்திரப்படுத்துவேன்!
அவர்களிடம்தானே
என் வைரக்கற்களை
வைத்துக்கொள்ளக் கொடுப்பேன்!
2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடிகள்

எனது தெருக்களில் - இப்போது
முகமூடிகளின் விற்பனை
அமோகமாய் நடக்கிறது!
விதவிதமாய் முகமூடிகள்!
கோர முகம்...
சிரித்த முகம்...
அழுகை முகம்...
அனைத்துக்கும் பிரதிநிதிகள்
அமோகமாய் இருக்கிறார்கள்!
ஒருவன்
எல்லா முகங்களிலும்
கணக்கெடுத்து வாங்குகிறான்
நிறங்களிலும் பேதம்...
அத்தனையும் வேண்டுமென்றான்!
கடைசியிலே
இத்தனை முகம் அணிந்தாய்!
உந்தன் சொந்த முகம் எதுவென்றேன்!
சொந்தமுகம் என்றால் என்னவென்று கேட்டான்!
நீ அவனா...?
நீ இவனா...?
இல்லையென்றால்
நீ எவன்தான் என்றேன்...!
நான் மனிதன் இல்லையென்றான்!
உண்மையது!
இதைவிடவும்வேறெதைத்தான் நான் சொல்வேன்!

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் அழுக்கு

வெளியே திரளும்
சிரிப்பை நம்பி
ஏமாந்து விடக்கூடாதென்றுதான்
எப்போதும்
நினைக்கிறேன்...
எனினும்
சிரிப்புகள் வழியும்
உதடுகளுக்குள்
கருநஞ்சு
வளர்வதென்றால்
எங்ஙனம்
அதை நம்ப...?
சயனத்திலிருக்கும்
அவர்களின் விழியிடுக்குகளில்
பூளையென
வழிந்து ஒழுகுகிறது
மனதின் அழுக்கு!

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகள் இழந்த வாழ்க்கை

சில பூக்கள்
நறுமண சுகந்தம் எனப்
பொழுதுகள் விடிந்தன அப்போது!

இப்போது
ஒவ்வொரு விடியலிலும்
குருதியின் சுவடுகள்

மனிதம் மரணித்துத்
தெருவில் உலவுகிறது!

தூரத்தே தெருவில்
மல்லாந்து கிடக்கும்
மனித உடல்!
அருகே செல்ல
யாருக்குத் துணிச்சல்?

குருதியின் வீச்சத்தோடு
அடுத்த குண்டு
குறி பார்த்துக் காத்திருக்கையில்

பூக்கள், நறுமண சுகந்தம்
எங்கிருந்து வரும்?

நானும், நீயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருமாய்
வார்த்தைகளற்றுக்
கடந்து கொண்டிருக்கிறோம்
ஒவ்வொரு நாளும்,
ஒவ்வொரு பிணங்களாய்!

2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது மரணம்

இருட்டுச் சரியத்தொடங்கிய
ஒரு மாலை மம்மலுக்குள்
அது நடந்தது
நீ...
உன் நாவு
விஷம் கொட்டியது
விஷம் பட்ட பயிரென
ஓடிந்தேன்

வெளியே சிரித்துக் கொண்டிருந்தாலும்,
உட் கவிந்த மரணத்தை
எவர் அறிவார்?

உன்னுள் சுரந்த விஷத்தின் செறிவை
நீயே உணராதிருக்கலாம்
விஷம் என்று சொல்லுதலும் பாவமோ?
அது என் உயிர் குடிக்குமென
நீயே அறியாதவரைக்கும்

முதல் மரணம்
எந்தவித சம்மதங்களுமின்றி
மிக மெதுவாய்
அரங்கேறிற்று உயிர் கசியும் ஒளி
மெதுமெதுவாய்
உள்ளுக்குள் அமுங்கிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமறியாதபடி
அந்த மரணம்

இனியொரு பொழுதில்
உயிர்ப்பிழந்த உடம்பு
செயலற்றுப் போகலாம்

அப்போது என் மரணத்துக்காக
நீ கூட
ஏங்கி அழலாம்

அதனால் சொல்லுகிறேன்

அது எனக்கு
இரண்டாவது மரணம் தான்

அழ வேண்டுமெனில்,
இப்போதே அழுது விடு

2004


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகள்

கேள்விகளுக்கிடையில்
சிக்கிக் கிடக்கிறேன் நான்
ஒரு கூண்டுப் பறவையாக,
சிறகு விரிக்க முயலினும்
பறக்க முடியவில்லை
சிறகுகளை வெட்டியது யார்?

சிதறிக் கிடைக்கும் பதில்கள்,
எது சரி எனச் சொல்லும் தீர்ப்பாளி யார்?

வாழ்வின் மீதான ஆவலையெல்லாம்
நொடிக்குள்
போட்டுடைக்கும் கேள்விகள்

நெஞ்சைத் துருவித் துருவி
புடைத்துக் கொண்டு
வெளிப்படும் கேள்விகள்

எல்லாவற்றினதும்
மூலகாரணம் எது?
எங்கிருந்து விளைந்தன
இந்தக் கேள்விகள்?

எந்த ஆரம்ப இழை
இந்த முடிச்சை உருவாக்கியது?

கேள்விகள் என்னைச் சுற்றிலும்
பாம்புகளாய் நெளிகின்றன
2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் தீண்டிய மௌனம்

மௌனம்
பட்டாடை புனைந்திருந்தது
மௌனத்தின் வசீகரம்
இரவில்
குளிர்ந்த நிலவாயிருந்தது
பகலில்
நெருப்பெனச் சுட்டது மௌனம்

நெருப்பெனச் சுட்ட
மௌனத்தை அவிக்க
ஒரு துளி சொல்லை
நீரெனத் தெளித்தேன்

நீரெனப் பட்ட சொல்லுடன்
பட்டாடை கிழிந்தது

மௌனத்தின் வேஷங்கள்
கலைந்தன

மௌனம்
மிக,மிக அழகானதாயிருந்தது
சொல் தீண்டாத வரைக்கும்

இப்போது
மௌனம் எனும் வார்த்தையே
வெறுப்பூட்டுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு சொல் தீண்டின்
மௌனத்தின்
மற்றுமொரு முகம்
அம்பலமாகி விடக்கூடும்

மௌனத்தினடியில்
எத்தனை விஷப்பாம்புகள்
நெளிகின்றனவோ?

சொல்லினால் கிழித்தெறிந்த
மௌனத்தின்
அப்பட்டமான உண்மையைக் காணப்
பயமாய்த் தானிருக்கிறது

மௌனம்
சப்தங்களின்றி உள்ளே
புயல் செய்கிறது

மௌனம்
உள்ளே சபதங்கள் போடுகிறதா?

மௌனத்துடனான
கைகுலுக்கல்களை
இனிமேலும்
நம்பத் தயாராயில்லை மனது
2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கைகள்

எனது நம்பிக்கையின் இழைகளை
சமுத்திரத்தில்
மிதந்து கொண்டிருக்கும்
தீபங்களோடு சேர்த்து
மிதக்க விடுகிறேன்

எனது,
உனது
இன்னும் சொல்லவியலாத
எத்தனையோ நம்பிக்கைகளை
இழை, இழையாய்ப் பிரித்து
அனுப்பி வைக்கிறேன்

யார் கரம் சேரக்கூடும்?
யார் வசம் இசையக்கூடும்?

எங்காவது
யார் கையிலாவது
எனது நம்பிக்கைகள்
வாழட்டும்

எனது கையிலிருப்பதால்
அந்த நம்பிக்கைகளின் ஆயுள்
குறையக்கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து போனதால்
எனது நம்பிக்கைகள்
ஒவ்வொன்றையும்
மெதுமெதுவாய்க் கழற்றி
ஆற்றில் மிதக்க விடுகிறேன்

இதோ,
எனது கடைசி
நம்பிக்கை இழையும்
ஆற்றுக்குப் போகிறது

2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயத்தனம்

மூச்சள்ளிப் போயிற்று
காற்று ஒரு நொடிக்குள்
காற்றின் அணைப்பில்
பறந்து கொண்டிருந்தேன்
இலேசாய், மிக இலேசாய்
உலகம் நினைப்பிலில்லை
பயணம் மட்டுமே
பிரதானமாயிற்று
“பொத்“தென்ற காற்று
எனைத் தள்ளிப் போயிற்று
விழுந்தேன் வெறு நிலத்தில்
பட்ட காயங்கள்
ஆறிக் கொண்டிருக்கையில்
காத்திருக்கிறேன்
இனியொரு தடவை
காற்று என் மூச்சள்ளிப் போகுமென்று,
அப்போது
காற்றை மட்டுமே
இறுகப் பற்றும்
பிரயத்தனங்களோடு

2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதைகாலம்

எனது குரல் நாண்கள் அறுந்தன
உனது குரல்
கூர் வாளான போது

எனது மூச்சை
அள்ளிப் போயிற்று
உனது மூச்சு
நான் பேச்சற்றுப் போனேன்

சுவாசத்திற்காகத்
தடுமாறுகிறேன் நான்
நீ வாசத்திற்காக
என் பூக்களை பறித்தாய்

நீ நினைத்ததை நடத்தினாய்
நான் நடைப்பிணமானேன்
இனி நீ
இது உன் காலம்
எனது இறுதி அத்தியாயங்களை
நீயே எழுது

உயிர் போகும் வரை தானே
வதைக்க முடியும் உன்னால்
2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை உணர்தல்

விழிப்பும்,
உறங்கலுமில்லாக் கணங்களில்
கடந்து போய் விடுகின்றன
எல்லாம்
ஒரு மயக்க நொடியில்
தவற விட்டு விடுகிறோம்
எல்லாவற்றையும்,
எல்லாவற்றையுமே

நட்சத்திரக் கூட்டமாய்
பூத்துக் கிடக்கிற விருட்சங்களை
பாயாய்ப் படர்ந்து
மிருதுவாய் சல்லாபமிடும் பூக்களை
தொடரும் கடமைகளுக்கிடையிலும்
காதல் சொட்டும் கணங்களை
இடையிடையே
சமாதானத்துக்காக
நீட்டப்படும் கரங்களை
எல்லாவற்றையும்,
எல்லாவற்றையுமே
தவற விட்டு விடுகிறோம்

கோடையில் மொட்டையாய்
தவமிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருட்சங்களையும்
உழைத்த களைப்பில்
காதல் சோர்ந்த கண்களையும்
யுத்தத்திற்கான
படையெடுப்பையும் மட்டும்
கண் இமைக்காமல் பார்த்த பின்பு
சொல்லுகிறோம்
வாழ்க்கை எமக்கு வசப்படவேயில்லை

2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரல் பற்றி நடத்தல்

அந்த அழகிய கனவின்
மென் ஸ்வரத்தில் நீ

உன் விரல் பற்றி நடக்கும்
சிறு குழந்தையென ,மனது

கபடற்ற உனது முகம்
களங்கமற்ற ஒரு கவிதையென
கனவினில்
எந்தக் கறையுமற்று
நீ என் விரல் பற்றி நடத்தினாய்

சட்டென்ற விழிப்பில்
என் விரல் விடுபட்டது
உன்னிலிருந்து

கனவு கலைந்தது
கலைத்துப் போட்ட
காலத்தைச் சபித்தபடி நான்!

2004


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவின் படர்தலில்...

மனதுக்குள் கொடிகொடியாய் இழைந்து
படுத்திருக்கும் நினைவுகள்..
மல்லிகைக் கொடியென எண்ணி
சுற்றிலும் படர்ந்த பாம்புகளாயும் சில
படர்வுகள்..
உதற நினைக்கும் மனம்
பாம்பெனும் பயம் கொண்டு...
சீ...போக மறுத்து பயம் காட்டி...
நெளிந்தபடி...
கொடியோடு கொடியாய்...
உதறிவிடும் வேளைகளில்
போனதாய் போக்குக்காட்டி...
பிறிதொரு வேளையில்
திடுக்குற்றுச் சிலிர்க்க வைத்து...
இருந்தாலும்,
உள்ளே சுருட்டிக்கொண்டு...
மல்லிகைப் பூப்பந்தாய்...
மனதை வருடி வருடி வரும் வாசம்
வருஷத்தில் நாலைந்தே தரமெனினும்...
சாகும் வரைக்கும் இந்த
மனதினின்றும் அகலாததாய்...

2003

பொதுசன நூலகம் 23 AUG 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை அவிழ...

மழை அதிரும் இரவு...
மௌனத்தைப் போர்க்க விரும்பிய
மனது...
அடை மழையுள்
ஆயுள் தீர்க்கக் கத்தும்
மாரித்தவளைகள்
உனது ஆயுளும் ஒரு நாள் தீரும் என..
நீருள் விழுந்த
நிலவின் உடைவுகளென
உள்ளே பளபளக்கும்
உணர்வுகளின் உடைசல்கள்..
சரித்துக் கொட்டிய
குடநீராய்
வாசல் முழுவதும் வெள்ளம்
மன வெளி எங்கும் தான்

2003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்காத கேள்விகள்

13868 cc

ஒரு காற்றென
வழி மறித்துச் சொன்னாய்...
என்
காலங்களுக்குத்
துணையிருக்கப் போவதாய்..
என் காயங்களுக்குக்
கட்டிடப் போவதாய்...
என் கவிதைகளுக்குக்
கருவாகப் போவதாய்...
எந்தக் காலங்கள்...?
எந்தக் காயங்கள்...?
எந்தக் கவிதைகள்...?
எதுவுமே கேட்காமல்
சம்மதமாய் தலை அசைத்தேன்...
இப்போது உள்ளே
கனக்கின்றன கேள்விகள்...
எந்த காயங்களுக்குத் துணையிருப்பாயென?
எந்தக் காயங்களுக்குக் கட்டிடுவாயென?
எந்தக் கவிதைகளுக்குக் கருவாகுவாயென?
ஒரு காற்றென
மீண்டும் நீ வழிமறிக்கையில்
கேட்கவேண்டும் உன்னிடம்...

2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றை ராத்திரியும் காற்றில் அலையும் மெழுகுச்சுடரும்

நீளமான இந்த இரவின்
முழுமைக்கும்
போதாது
மெழுகுவர்த்தியின் கீதம்...
உறங்காத விழிகளுக்குப்
போதாமலிருக்கிறது
அந்த நினைவுகளின் தடங்கள்...
ஒரு மணியிசையென காற்று
சலசலத்தோடுகிறது
இரவின்
விளிம்புகளைத் தடவி...
மனதிடுக்குகளில்
தங்கிய
ஞாபகக்கசிவுகளில்
எங்கேனும்
அருமையாய் ஒரு
கவிதை பீறிடக் கூடும்.
அந்தக் கவிதைக்கெனவே
ஒற்றை ராத்திரியின்
மெழுகுச் சுடர் அலைதலும்...
உறங்காத விழிகளுள்
தவமிருக்கும்
அந்த நினைவுகளின் தடங்களும்...
2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட வருதல்

போக மறுக்கிறாய் நீ
பிடிவாதமாய் என் கூடவே
வரவேண்டும் என்பதில்...
எழுதி வைத்த கவிதைகளுக்கிடையில் இருக்கும்
சில கிறுக்கல்கள் போல...
நடந்து போன சுவடுகளில்
தெரியாமலே தங்கியிருக்கும்
ரேகைகள் போல...
உறக்கத்துக்குள் அர்த்தப்படாமல்
எட்டிப்பார்க்கும் குட்டிக் கனவு போல
உனதின் வழியில்
என்னைப்பிரிக்காத
என் "விதி"யே...
காதலுக்குக் கூட இல்லாத
கரிசனையாய்
கடைசிவரைக்கும்
மரணத்தின் வாசலுக்கும்
அதற்கு அப்பாலும்
என்னோடு வருதலில்
என்றும் தயங்காமல்
நீ...!
2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயம்

உள்ளும் புறமுமென
வலி பிறாண்டிற்று மனதை...
இலேசாய் மழைக்காற்று
சாரலடித்தால் வலி போகக்கூடும்...!
யார் அறிந்தது...?
மழைக்காற்றுக்குப் பதிலாய்
அனல்காற்று உள்புகுந்தால்...?
பூட்டியே இருக்கட்டும் கதவு...!

2002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்

“நேற்று” என் காலடியில்
சொட்டிப் போனது இரத்தத்தை.....
“நேற்றின்” இரத்தம்
உறைவதற்குள்.....
“இன்றின்” கூக்குரல்
கேட்கிறது!
நாளை..... “இன்றின்” இரத்தம்
என் காலை நனைக்கலாம்.....!
இறுதியில் என்றோ ஒருநாள்.....
“நேற்றின்” இரத்தமும்
எனது இரத்தமும் கலக்கின்றபோது
எனக்கு.....
நாளை என்பதே இல்லாமல் போகலாம்!
அப்போது
“நான்” என்பதும் தொலைந்து போகலாம்!

2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்திற்காய் இக்குறிப்பு

ஒரு புகை போல் படர்ந்த
கனவுகளைக்
கலைத்துப் போடுகிறது காலம்!

எனதினதும்
இந்தக் கணம் வரையிலானதுமான
கர்வங்கள் அறுந்து போக
வெறுமை படர்கிறது
வாழ்வை மூடி!

வாழ நினைத்த போது
நினைப்புகளையே
இனிப்பாக்கிய காலம்
வாழ்தலை வெறுத்த போது
பாரங்களாகிக் கனத்த காலம்
வெளியே நின்று பார்க்கையில்
வெறும் ஒற்றைச் சொல்லாய்
ஒதுங்கி நிற்கிறது!

இனி,
வாழ்விற்கு வெளியே
வாசலில் நின்று
ஒரு விருந்தாளி போல
வாழ்வை அழைக்கலாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே
சிரிப்புச் சலங்கைகள்
குலுங்கிடும் போது
வெளியே நின்று
வேடிக்கை பார்க்கலாம்!

அழுகைக் கோலங்கள்
கேட்டிடும் போது
அதிகம் அலட்டாமல்
ஒதுங்கியே நிற்கலாம்

வாழ்வின் வெளியே
ஒரு விருந்தாளி போல் என்னை
மாற்றிய காலமே
நீ வாழி!

2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமும் நானும்

யுத்தத்தின் வெறுவெளியில்
ஒரு சருகாய் எற்றப்பட்டேன்!
வீதிகளில், வெறுந்தரையில்
நாதியின்றி அலைந்துலையும்
நகர்வுகளில் ஒன்றானேன்!
பேசரிய பெரும் போரில்
வட்டமிடும் கழுகுகளின்
கோரமிகும் விழிமணியில்
குற்றுயிராய்ப் பலியானேன்!
கூனி நின்றேன்!
கொஞ்சம் கூன் நிமிர்த்த எண்ணுகையில்
வான் உரத்து அழுவதையும்,
வந்த ஒரு தோட்டா
மார்புரசிச் செல்வதையும்
உளம் பதைக்க உணர்ந்து நின்றேன்
சிரிக்க மறந்தேன் - ஓர்
வரி வடிவாய் மட்டும்
அதிர்ச்சியில் உறைந்திருந்தேன்!
நிலம் உயிர்க்கும் வரைக்கும்,
நானும் உயிர்த்திருக்கும்
கனவு பொய்த்து விட
காலால் உதைத்த ஒரு
கொடு உருவின் முன்னிலையில்
தோற்றுத்தான் போனேன் நான்!
2001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதட்டின் சாவி

திறக்கப்படாக் கதவுகள்
உன் உதடுகள்

இறுகப் பூட்டினதார்?

உள்ளே கொட்டிக் கிடக்கும்
முத்துப் பரல்கள்

திருட்டுப் போகுமென்றெண்ணி
இறுகப் பூட்டும் கதவுகள்

என் இதயம் தானா
உன் உதட்டின் சாவியானது?

1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவிற் பெய்யும் மழை

மாரித் தவளைகள்
இன்னும் கத்திக் கொண்டிருக்கின்றன

மழையோ சிருங்காரமாய்
சிணுங்குகிறது

முகில்கள் துளிகளாய்ச் செறிந்து
நிலத்தில் மோதி
ஆர்ப்பரித்த பின்னும்
மெதுவாய்க் கரைந்து
பூமியைத் தழுவும் மழை

இரவின் அருமையும்,
நிலவின் குளிர்மையும்
மழைக்கும் பிடித்திருக்கிறது

வானம்
பகலைக் கடன் கொடுத்து விட்டு
நிலவையும், நட்சத்திரங்களையும்
பகட்டாய் உடுத்தியிருக்கிறது

நிலவுரசிச் செல்லும் மேகம்
நிலாத் துகளைக்
கரைத்து வந்ததோ?
உதிர்ந்த விண்மீன்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்த்துளியிற் கலந்துளதோ?

செடித்தளிர்கள்
சாமரமாய் வீச
உயிர்க்கெல்லாம்
இராக்கூதல்

மழை,
உலகத்துச் சோகங்களுக்கெல்லாம்
மொத்தமாய்
அழுது தீர்த்தபின்
சின்னதாய் ஒரு விசும்பல்

இன்னும் மாரித்தவளைகள்
கத்திக் கொண்டிருக்கின்றன
இரவுக்கு சோபனமாய்

1997

286743



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பு

ஈரத்திலுறைந்த விழிகள்
இறைஞ்சின,
இறையே... இறையே...

தொண்டைக்குள் முட்கள்
சிக்கித் திணறின

குரல் எழாமலே
மூச்சைப் பிடித்துக் கொண்டு
உயிர்கள்

உயிர்த்துளி
உதிர்ந்து சிதறுமுன்
அந்தரத்தில்
அதை பற்றிக் காப்பாற்ற
ஒரு விக்ரமாதித்தனோ,
கிருஷ்ண பரமாத்மாவோ...

யாருமில்லை,
யாருமேயில்லை

காலுடைந்த ஆட்டுக்குட்டிக்காய்
ஓடி வந்த புத்தர்
காலுடைந்து, கையிழந்து
தெருவில் கிடக்கும் மனிதர்களுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேயில்லை,
வரவேயில்லை
தொண்டைக்குள் முட்கள்
நீரில் விழிகள்
மூச்சைப் பிடித்தபடி
உயிர்கள்

விக்ரமாதித்தனோ,
கிருஷ்ணனோ,
புத்தரோ கூட
எமைக் காக்கப் போவதில்லை
நாமே நமக்கு
மூச்சைப் பிடித்து
எழும்பின உயிர்கள்

1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

நோய் பிடித்த
ஆட்டின் கால்களில் புழுக்கள்
அவை குடையும் வேதனையில்
முனகிக் கொண்டிருக்கும் ஆடு

கடையில் வாங்கிய
பவுடர் மருந்தைக் கால்களிற் கொட்ட
எனக்கோ அருவருப்பு

நோய் பிடித்த ஆட்டின் கால்களில்
புழுக்கள் நெளிந்தபடி

1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாளரங்கள்

காற்றுக்காகத்தான்
வீடுகளின் சுவர்களில்
சாளரங்கள்
பதிக்கப்படுகின்றன!
கதவுகள் திறக்கப்பட்டுக்
காற்றுக்கு
வழிவகுத்த பின்னாலும்
திரைச் சேலைகள்
மெல்லிய செடிகளின்
அசைவாய்...
காற்றிலாடிக்
கொண்டிருக்கும்!
சாளரத்துக்குக்
கம்பிகள் எதற்காக...?
யாராவது
எப்போதாவது
யோசித்ததுண்டா...?
விரல்களுக்கு ஒரு
பிடிப்பாக
இறுகப் பிடித்தபடி...
"என் ஜன்னல் கம்பியே...
நீ இருக்கிறாய்..."
எனத் துணிவுற்றுத்
தெருவோடு கண்கள்
பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்காகவல்லவா
ஜன்னல் கம்பிகள்...
எல்லா வீட்டுக்குமே
சாளரங்கள் இருக்கின்றன...
எல்லா ஜன்னல்களுக்குமே
கம்பிகள்
இருக்கின்றன
எல்லாவற்றுக்கும்
உயிர் இருப்பதில்லை...!
என் வீட்டு
ஜன்னல் கம்பிகளுக்கு
உயிர் உண்டு...!
சட்டென்று தொட்டவுடன்
குளிரூட்டி
மனதுக்கு
இதமாகும்!
இதய உணர்வுகளைச்
சில்லென்ற தொடுகையில்
பரிமாற்றும்...!
நீ யாருக்காகக்
காத்திருக்கிறாய்...?
என்பது தெரியும்
என்று புன்னகைக்கும்!
சீறி விழாது...
சினந்து கத்தாது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் நீ இப்படியே
இருப்பதில்
ஆட்சேபனை
இல்லையென்று
இதமாய்த் தடவும்...!
என் இருபது வருஷத்துக்
கண்ணீர் துளிகளையும்
தேக்கி வைத்திருப்பதால்தானோ
இத்தனை குளிர்ச்சியாய்
இருக்கிறது!
எப்படித் தெரியும்
உனக்கிந்த வசியம்...?
என் கன்னங்களில்
சூடாக விழும் கண்ணீர்
உன்னை அணைந்தவுடன்
குளிராகிப் போகிறதே!
எப்படித் தெரியும்
உனக்கிந்த வசியம்...?
என் வரையில்
சாளரங்கள்
காற்றுக்காகவென்பதெல்லாம்
வெறும் பொய்தான்...!
என்னுடைய
ஆறுதலுக்காகத்தான்இந்த சாளரங்கள்...!
1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்

மரணத்தை நான்
நேசிக்கிறேன்...!
அது இயல்பாக வருமென்றால்...
ஒரு மலரில் தெரியும் பூந்துகளாய் ...
வானுரசி வீசும்
மெலிந்த மேகமாய்...
சொட்டென்று விழும்
முதலாவது மழைத்துளி
மணலோடு கரைவுறுதலாய்...
இயல்பாய் வரும் மரணமெனில்
அதை நான் நேசிக்கிறேன்!
மரணத்தை நான் வெறுக்கிறேன்...!
சம்மதமில்லாமலே
புணரப் பார்க்கிற காமுகனாய்...
வெடிமருந்தின் கரிய நெடியாய்...
சூடான குருதித்துளியில்
தன் தாகம் தீர்க்கும்
நரவேட்டைக்காரனாய்...
வரும் குரூரமான மரணத்தை
நான் வெறுக்கிறேன்!

1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழிந்த இதயம்

ஒரு மழை கவிந்த
நிலாக் காலத்தின்
மௌனம் மிளிர்ந்த தூறல்களாய்...
வசீகரத்திலூறிய
மௌனப் பொழிவின்
அர்த்தப் பரிபாஷையாய்...
உன்
சிநேகிதமான முறுவலிப்பு...!
நீர்முத்துக் கோத்த
வேப்பந்துளிர்கள்
காற்றிலாடி நீர் தெளித்து
ஆசீர்வதித்ததாய்
ஓர் ஞாபகம்...!
மழை இழந்த
பொழுதுகள் ஆயிற்று இன்று!
அமுதத் துகள்களின்றி
வறண்டு போயிற்று வானம்...!
வேம்பு சருகுகளோடு
சதிராடிக்கொண்டிருக்கிறது...!
காற்றுக் கிழித்த வாழையிலையாய் ...
காலம் கிழித்துப் போட்டது
என் இதயத்தை...!
1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்கம்

நான் அழுவதற்கும்
தயாராயிருக்கிறேன்...!
என் கண்ணீர்
ஒரு சின்னப் பூச்சியின்
தாகத்தையாவது
தணிக்குமெனின்...
நான் அடிபடவும் சம்மதிக்கிறேன்...!
எந்த ஒரு தாக்கத்துக்கும்
சமனும் எதிருமான
மறுதாக்கம்
இல்லையெனும் பட்சத்தில்...
நான் சிரிப்பதற்குக் கூடத்தயார்
உன் துயரங்கள்
அதன் மூலம் கழுவப்படும் என்றால்...
ஆனால்..
என் கண்ணீரால் எந்த ஜீவராசிக்கும்
பயனில்லாமல் போகுமென்பதால்...
நியூட்டனின் விதி
என்றுமே மாறாதிருப்பதால்...
நான் சிரிப்பது
ஒருபோதுமே உனக்கு
சந்தோஷத்தைத் தரப் போவதில்லை என்பதால்...
நான்
அழாமல்... அடிபடாமல்... சிரிக்காமல்...
வாழ்வதற்குப் பழகிவிட்டேன்!
1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதி

நிலாத்துளி
இலைகளூடாக வழிய...
தென்றலின்
தெவிட்டாத விசிறல்
குளிருக்கு இதமாக...
எங்கோ
மழைகாலப்பட்சிகளின்
மயக்கும்
மதுர மிழற்றல்...!
ஆரவாரமில்லாமலே
அட்சதை தூவும்
வானத்து விண்மீன்கள்...!
நிலா இருட்டில்
கனதியாய் நீண்ட
மௌனம் ...
என்றாலும்
இந்த இனிய அமைதி
நிரந்தரமில்லை
என்ற சோகத்தோடு...
கோபமாய் சடசடக்கும்
துப்பாக்கி சூடுகள்...!

1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ கவிதைகள்

வானத்தைப் பிரிய மாட்டாமல்
முகில்கள் விடும் கண்ணீர்
மழை!

* * *

சூரியன் கண்ணடித்ததால்
மழைத்துளிகளின் வெட்கம்
வானவில்!

* * *

குளத்தில் கூடச் சொரிந்திருக்கிறது
சிவப்புச்சங்குகள்
ஓ... தாமரை மொட்டுக்கள்!

* * *

ஆற்றில் கேட்கிறது
சலங்கைச் சத்தம்
தவளைகளின் பாய்ச்சல்!

* * *

சுழன்று விழுகிறதே
வண்ணத்துப்பூச்சி!
அட... பறவையின் சிறகு!

* * *

பூச்சூட ஆசை தான்!
என்ன செய்வது?
கூந்தல் இல்லையே!

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு வயலில் விதைத்ததால் தானோ
ஒன்றுமே இன்னும் முளை விடவில்லை,
வானத்து விண்மீன்கள்!
* * *

கிணற்றுக்குள் பறக்கிறது
ஹெலிகொப்டர்,
தும்பி!
* * *

நீ கேட்ட போது தர மறுத்த பூக்களை
இப்போது தருகிறேன்,
உன் கல்லறைக்காக!
* * *

அந்தி மாலையில்கடலில் வீழ்ந்து
தற்கொலை செய்கிறான் ஒருவன்!
அட.. சூரியன்!
* * *

இயற்கையின் கழுத்தில்
வருணன் பூட்டிய தங்கச் சங்கிலி
மின்னல்!
* * *

இரவு நேரத்தில் மட்டுமேயென்றாலும்
என் கவிதைகளுக்குக் குடை பிடிக்கிறான்
ஒரு கறுப்புச் சேவகன்,
எழுதிக் கொண்டிருக்கும் கையின் நிழல்!
1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் சபிக்கும் நாள்கள்

இனிய கவிதைத் தூறல் விழுந்து இதயம் பூத்ததே!
பனியில் நனைந்த பூவைப் போல விழியும் கரையுதே!
உதய வேளை உயிரின் கீதம் என்னை எழுப்புமே!
சிதிலமாகக் கனவு மாண்ட கதையை நினைக்குமே!

மண்ணில் இன்று வேனிற்காலம் வெயில் கொழுத்துதே!
விண்ணில் கூட நிலவு கண்டு நாளும் ஆனதே!
சோக நாள்கள் தாண்டிப் போகும் வேளை வந்ததே!
தாக நேரம் நீர் பருகத் தடையும் வந்ததே!

குரல்வளையும் உடைந்த குயில் கூவ மறுக்குதே!
நிரல், நிரலாம் பறவைகளின் சிறகு முறிந்ததே!
வாழ்வறுந்த பேதைப் பெண்கள் நெஞ்சங் கதறுதே!
வாழ்வதன் முன் வதைத்த பிஞ்சுப் பூக்கள் வாடுதே!

காயம் பட்டு நொந்த போது கருணை கொள்வதார்?
தேயவில்லைத் துயரம் என்று தெரிந்து கொள்வதார்?
தேசமெல்லாம் பார்த்திருக்கு; தேறுதலில்லை!
நாசம் வந்த பின்பு தானா வந்து செல்லுவார்?

பூமகளின் புழுதியில் ஏன் புதைந்ததிந்தக் கறைகள்?
தீயெழுதும் கவிதைகளும் எழுந்தெழுந்து புலம்பும்!
என்று வரும் விடிவெள்ளி எனத் தேடும் விழிகள்
“இன்றிருக்கும் நிலை போக” எனச் சபிக்கும் இதயம்!
1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனை செய்து வா! சின்னவா!

பூவெனப்படருமுன் பொன்வண்ணப்பார்வையில்
மழலைப் பூங்கேள்விகள் ஒளிந்திருக்கும்!
ஏனெனத் தொடங்கிடும் இதயத்து வார்த்தைகள்
உதட்டுச் சறுக்கலில் நெளிந்திருக்கும்!
தேனெனத் தித்திக்கப் பேசுமென் பிள்ளையே!
தெவிட்டாதிருந்ததுன் தேறல் மொழி!
நானுமே துயருறப் போவதேன் அறிகிலேன்?
ஆயினும் வாழ்த்துகள் நான் தந்தேன்!

இன்பமாய், துன்பமாய் இரண்டிலும் இணைந்ததாய்
இளையவா என்னிடம் நீ வந்தாய்!
அன்பிலே தோய்ந்ததாய், ஆசையில் நேர்ந்த என்
ஆவலை நிறைக்கவாய் நீ ஆனாய்!
என்பினை உருக்கினேன்! என் உயிர் வருத்தினேன்!
எனக்குளே நானாக மறுகினேன்!
துன்பியல் போக்கி நீ துடிப்பாக வரும் நாளை
எண்ணினேன்! மனத்துயர் அகற்றினேன்!

பிள்ளைக்கும், அன்னைக்கும் பிரிவேது கண்மணி?
பாசங்கள் பிரியாத பாலங்கள்!
வெள்ளத்தில் அலை மோதி உறவெல்லாம் போகும்!
விலகாது என்றும் எம் நேசங்கள்!
முள்ளுக்குக் கால் தந்து அழுதன்று நின்றாய்!
என் நெஞ்சில் பூ ரத்தம் கண்டாய்!
புள்ளுக்குக் கல் விட் டுப் புண்பட்டு நின்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைக்கும் உயிருண்டு என்றாய்!

போகிறாய் மைந்தனே! இன்றெனை துயரத்தின்
பிடிதனில் ஆழ்த்தி விட்டு!
ஏகினாய் உள்ளத்தில் என்றோ ஒரு நாள்
ஏற்றினாய் ஒளியுமிழ் தீபம் தன்னை
நோகிலும் ஏற்கிறேன்! நோன்பு கொள்வேன்!
நோய் நொடி வென்று நீ வாழவென்று!
சாகிலும் நீ வர முன்பு சாகேன்! சாதனை
செய்து வா காத்திருப்பேன்!

1998


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நறுந்தமிழில் நயந்தெழுத வேண்டும்

ஆவலுடன் போயெனது ஆத்மாவின் உயிரனைய
பேனாவை எடுத்தெழுதும் போது - என்
தூங்காத எண்ணம் விடும் தூது!
பூவணைகள் போட்டெனது  புண்மனதை மூடி வைத்து
தூவி விடும் பாச்சரங்கள் சேர்த்து - நான்
பாடி விட்டேன் இசை கோர்த்து!
நாவில் வரு நறுந்தமிழின் நயந்தெடுத்த பா ரசித்து
நீவிவிடும் சொற்சுவையில் ஆழ்ந்தேன்! -அந்தப்
பூந்தமிழின் புல்லரிப்பில் வீழ்ந்தேன்!
சாவு வரும் போதெனினும் செந்தமிழைச்  சேர்த்தணைக்க
பாரதியின் பாட்டு கையில் போதும்! - அது
காலனவன் எதிர் உடனே மோதும்!

பச்சைப் பசுந்தமிழின் பாகனைய மொழி கேட்டுப்
பருவ நிலாப் பேசக் கூடும்! - அது
பனி சொட்டும் குழைவுடனே யாடும்!
உச்சச் சுருதியெழ, உணர்வெலாம் உருகியழ
உள்ளத்தினை நெகிழ்த்திப் போட்டு - நீ
உருக்கும் தமிழ்ப் பாட்டுக் காட்டு!
குச்சு ஒழுங்கையிலும் குயில் கூவும் ஓசையிலே
குதூகலத் தமிழோசை வேண்டும்! - அது
குவலயத்தை நம் பக்கம் தூண்டும்!
நச்சுச் செயல் விலக்கி நறுந்தமிழில் நயந்தெழுது!
நன்மை உலகெல்லாம் சூழும்! - நன்
நாடென்ற பேரிங்கு வாழும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டும் தமிழ் முரசைக் கொள்கையிலே வீறுற்ற
காளையரைக், கன்னியரைக் கண்டு -தாய்
தந்து விட்டாள் தமிழ்ச் செண்டு!
வெட்டுப் பகையழிய வீண் பேச்சுத் தானருக
கத்தியின்றி வெற்றி வந்து சேர! - அதைக்
கட்டியமாய்க் காற்றெழுந்து கூற
முட்டும் துயரகன்று,முதுமைப் பயம் கருக
முகமெல்லாம் மகிழ்வலைகள் தோயத் - தமிழ்
மங்கையவள் மனங் கனிந்து சேர
எட்டுத் திக்கொலிக்கும் எழிற் றமிழின் கீதங்கள்
என்றும் அழியாது வாழும்! - அதை
எழுதிப் பழகும் கை ஓங்கும்!

1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைக்குட்டை தொலைந்ததனால்...

"நெற்றிப் பிறையழகி, நீள் விழியிற் கயலழகி
நீண்ட கருங்கூந்தற் பின்னலிலே மனமுருகி
குற்றமில்லாமற் காதலிப்பேன் உன்னை"யென்று
குறுந்தாடி வைத்திருந்த இளைஞன் சொல்லுகிறான்
"பற்றியெரிகிறதே! தமிழ்ச் சாதிப் பிரச்சினைகள்
பார்த்திலையோ, இது இருக்க நீ வந்து இன்றென்னைச்
சுற்றித் திரிவதுவோ! சூழும் துயர் விலக்கு"
சுந்தரி மெல விலகித் தன் வழியே போகின்றாள்

"நீயின்றி நானில்லைக் கோகிலமே போகாதே!
நீரின்றித் தவிக்கின்ற கலைமானாய்த் தவிக்கின்றேன்
போயின்று வரும் நாளைப் பக்குவமாய்ச் சொல்லி விட்டு
எந்தனுயிர் கொண்டு சென்று பின்னர் நீ வாராயோ?"
"ஓயாமல் எனைச் சுற்றிக் காண்பதென்ன கடைசியிலே?
ஒதுங்கியெனைப் போக விடு; இல்லையெனில் சேரும் வடு"
தேயாத நிலவைப் போல் பேரழகி சினக்கின்றாள்;
தேர்ந்தெடுத்துச் சொல் திரட்டிக் கேள்வியொன்று கேட்கின்றாள்

"முத்தே! மரகதமே! என்றெல்லாம் உன் பேச்சில்
முத்தமிழ் கோர்த்தெடுத்தென் அழகுதனைச் சீரெடுப்பாய்
முத்துக்கள் இருக்கையிலே சீதனமும் கேட்டு வைப்பாய்!
சித்தத்தில் எனைச் செதுக்கி வாழ வைக்கும் நினைப்பிருந்தால்
சீதனத்தின் நினைப்பெதற்கு? கேட்பாயோ வரும் நாளில்?
புத்தியிலுறைத்ததுவோ? உறைத்ததெனில் உன் முடிவு
புதுமையினைப் படைத்திடுமோ? படைக்குமெனில் உன் வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து விளக்கேற்றி வைக்க குலமகளாய் வருகின்றேன்”
என்று பல சொல்லி விட்டு ஏந்திழையாள் காத்திருந்தாள்
“இரு பெண்ணே! வரும் வழியில் கைக்குட்டை தொலைந்ததனால்
அதை மீட்டு வருகின்றேன்” என்று சொல்லிச் செல்பவனை
அலட்சியமாய்ப் பார்க்கின்றாள்; தனது வழி தொடர்கின்றாள்!
1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்களிலே...

செவ்வந்தி வானம் சிரித்திருக்கும்! சுகம் தளிர்க்கச்
செய்யவென எண்ணிச் சிறு நிலவு பூத்திருக்கும்!
இவ்வளவும் இருந்தென்ன? ஊரடங்கும் வேளையென
இருக்கின்ற கதவெல்லாம் தமைப் பொருத்தும்!

ஆறாச்சு மணியென்றால் அம்மாவின் மனம் உதறும்!
எண்ணமெல்லாம் வந்து பிள்ளை மனம் பதறும்!
வீறுடனே போயொரு நாள் வீணாக "மாட்"டி வந்த
"வீக்க"மின்னும் மாறவில்லை என்றே உடல் கதறும்!

"செக்கிங்" கெனச் சொல்வார்; சைக்கிளை நீ உருட்டென்பார்;
செல்லும் வழியினிலே நினைத்தவுடன் நிறுத்திடுவார்;
உக்கல் கிடுகெனினும் வேலியென ஒன்றிருத்தல்
இம்மண்ணின் மரபு அதை வெட்டிச் சிதை என்பார்

வீதிக்கரையெல்லாம் நெடுமரங்கள் வளர்ந்திருந்து
விளைந்து நிழல் சுரந்த காலங்கள் இருந்ததுண்டு;
ஏதின்று ஆச்சு? எல்லாமே மறைந்த பின்பு,
எழில் மழுங்கி வெறுமையுடன் பாலையெனச் சுடுகிறது!

காலம் எமை விரட்டி வேடிக்கை பார்க்கிறதோ?
கலகத்தில் மாட்டி விட்டு விலகி நின்று சிரிக்கிறதோ?
நீலக் கடலெங்கள் நிம்மதியை விழுங்கி விட்டு
நிற்கமாட்டாமல் விழுந்து ஓடுறதோ?

எல்லாமேயின்று எதிர்ப்புக்குள் நடந்தாலும்
எரி நெருப்பாய் வாழ்க்கை எமக்குள் தகித்தாலும்
வெல்லமென உயிரை நினைப்பதுண்மை! அதனாற்றான்
வெயிலுக்கும் எமை வருத்தப் பழகியிருக்கின்றோம்!

1998



286743
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாய் நடப்பேன் நான்
# தொலைதூரப் படகாய்!

மாலைப் பொழுதுரசும்! மதுரசத் தேன் சொரிந்து
மல்லிகை மொட்டவிழ்ந்து பாடும்! - என்
மனதவிழ்ந்து மலரிதழ்கள் தூவும்!
மேலைக் கடல் முழுதும், மோனக் கவியெழுதும்
மோகச் சிறு புட்கள் மீளும்! உயிர்
மேலிருந்து தான் ரசிக்க நீளும்!
சோலைச் சரிவிலொரு சோதியொளி மின்னலிடும்!
சுந்தரமாய்ச் சுற்றி வரத் தாவும்! - மனம்
சிறு குயிலாய்ச் சிரித்தபடி கூவும்!
வேலை மறந்து விட்ட வேளையிது என்றாலும்
வெண்ணுரையின் இசை மீட்டல் கேட்டு! - நான்
வாங்கி வந்தேன் ஒரு பாட்டு!

நீலத்திரை எழும்பி நெஞ்சைக் குழைய வைத்து
நித்திலத்தின் ஒளி சுழற்றியாடும்! - அதில்
நீர் மீன்கள் இடையிடையே ஓடும்!
ஓலம் பாடுவதாய் ஒருக்களித்து வரும் காற்றை
உணர்ந்து ரசிக்க அலை வீழும்! - அது
உப்புத் தடவியபின் மீளும்!
காலம் ஓடுவது தெரியாமற் கண்களுமே
களிப்பூட்டும் சித்திரங்கள் காணும்! - கவின்
காட்டுகின்ற கோலமின்னும் வேணும்!
பால் போற் பருவ நிலா பக்கத் துணையிருக்க
பாட்டொன்று உள் மனதிற் தூங்கும்! - அதைப்
பாடி விட என் மனமோ ஏங்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்குகிற மலரினத்தின் மது மணத்தில் ஊறி
மருவு சுகம் தேடியிந்த வண்டினங்கள் ஊதும்!
மயங்கு நிலை தானேற்கும், மலருகிற பூவும்!
வியக்கச் செய்வேன் பார்; எனச் சொல்லும் வானம்!
விரிந்த மேகத்தால் தன் மேனி மூடி!
விண் மீனைக் கொண்டு தரும் தனக்குள்ளே தேடி!
இயக்கமுற்றிருக்கும் இயற்கை மடியினிலே
அழகின் மணிமகுடம் முடியேறும்! - வெண்
முகில்கள் தங்கி நின்று இளைப்பாறும்!
தயக்கமில்லாமல் தாவி வரும் அழகிரவு
தருகின்ற இதத்தினிலே துயரோடும்! - பின்
தவிக்கின்ற மனதடங்கி இசை பாடும்!

வானச்சேலையிலே வைரமணி இழைத்திருக்கும்!
வசீகரமாய் வண்ணமதி தோன்றும்! - வரும்
சுடரொளியில் இருள் குலைந்து தேயும்!
மோனத்தூறலிலே மனம் நனைந்து களித்த பின்பு
மோகப் பறவைகளைத் தேடி உயிர்
சிறகடித்துப் பறந்திருக்கும் ஓடி!
ஞானக் கரு துலங்கி, தூவும் பனி விலகி
நானும் கரையோரம் தனியாய் - இனி
நடப்பேன் தொலைதூரப் படகாய்!
ஊனமில்லாத இரவில் ஒளிர்ந்த பின்னர்
உதிர்ந்த விண் மீனை எண்ணி - என்
விழியில் உதிர்ந்து விழும் கண்ணீர்!

1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் ஞாபகம்

புளியங்காய் பறித்துப் பூரித்துப் புளுகமுடன்
பள்ளிக்கூடத்தில் வாய் புளிக்கப் பொச்சடித்துக்
களிப்பாய்க் கதை பேசிக் கதிரையினை இழுத்து விட்டுக்
கிருபாவை விழவைத்துத் தூக்கி விட்டுச் சிரித்தபடி
துளியாய்ச் செறிந்து விழும் தூறலிலே நனைந்து பின்னர்
தலை முழுக்க ஈரமுடன் காய்ச்சலெனப் படுத்திருந்த
ஒளிர் நாள்கள் இனிவருமா? ஒத்தடங்கள் தந்திடுமா?
ஒன்றுமில்லை என்று எங்கோ குரலொன்று ஒலிக்கிறது!

கண்ணாடி ரீச்சர் வாய்ப்பாடு கேட்டவுடன்
கையெண்ணிச் சொன்ன அந்தக் கணப்பொழுதும்
எண்ணத்தில் தோன்றியதை எழுத்தில் பொறித்து விட்டு
"ரிப்போட்" வரும் நாளைக் காத்திருந்த பொழுதுகளும்,
வண்ணப் பூச்சிகளாய் விளையாடி மகிழ்ந்திருந்த
வசந்த காலமெல்லாம் இலை உதிர்ந்து போனாலும்
பண்ணாய்ப் பாடி வைக்க நினைக்கின்றேன்! பழக்கமில்லை!
பாதி வரியினிலே வடிவம் புரள்கிறது!

விளையாட்டுத் திடலினிலே வீரத்தை உயிர்ப்பித்து
களைக்காமல் ஓடவெனச் "சந்துரு"வைப் "பூரணி"யை
"சாந்தி"யைத் துணிவேற்றிச் சாத்தி விட்ட வெற்றிகளை
களையாற்றக் குளுக்கோசும், குளிர் நீரும் பரிமாறி
"கண்ண"னுக்குக் கமோன் சொல்லிக் கூச்சலிட்ட
நினைவுகளை
வளைக்குள் ஒடுங்கி விட்ட இந்நாளில் நினைக்கின்றேன்!
எந்நாளும் இந்நினைவை மறக்கத்தான் முடியவில்லை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காய்க்குக் கல்லெறிந்து அகப்பட்ட மாதவனை,
மாதுளையின் சிரிப்பொளிரும் மாதினியை
ஆங்கோர் மாலையிலே மனம் ரசித்த கிரிக்கெட்டை
அதை ஆடி நின்ற ஆதவனை, கண்ணில்
தூங்கும் விழி நீரைத் துடைத்தெறிந்த புஷ்பாவை
துயர நிமிடத்தை இனிதாக்கும் இளங்கோவை
தேங்கி இருக்கின்ற தேவ நினைவுகளைச்
சேர்த்து வைத்துள்ளேன்! சிதற விட மாட்டேன்!

கவியுரைத்த மேடைகளை, எழுத்தை வளமாக்கக்
களமமைத்துத் தந்த தமிழ்த்தினத்துப் போட்டிகளை
தவிதவித்துக் காத்திருந்த பரீட்சை முடிவுகளை
திணறடித்த கணக்குகளை
பவித்திரமாய்ப் போற்றி வந்த கல்லூரித் தாய் நினைவை
பழம் பெருமைப் பொக்கிஷத்தைக்
குவித்து வைத்துள்ளேன், உள்ளேமூலையிலே!
எந்நாளும் அந்நினைவு குழம்பத்தான் விட மாட்டேன்!

கச்சான் ஆச்சியிடம் வாங்கிய சுருள்களையும்,
காலிப் பேப்பரில் கப்பல் செய்ததையும்
பச்சைச் சட்டையினை வடிவென்று “பஜி”சொல்ல
பத்துத் தடவை அதைப் பலர் பார்க்கப் போட்டதையும்,
அச்சம் தவிர்த்தந்த ஊர்வலத்திற் சென்று பின்னர்
அம்மாவின் சின்ன அடி வாங்கிப் பின் அழுததையும்
துச்சமென நினைக்க முடியவில்லை இன்றெனக்கு
மிச்சமிருப்பது நினைவுகளே, வேறில்லை!

1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு நாள் நிமிர்வேன்

வாசங் கமழ்கின்ற பூஞ்சோலை இன்றென்னை
வாடி வதங்க வைத்து வருத்தங்கள் தருவது என்?
நேசங் கமழுமென நான் நினைத்து வந்த இடம்
நித்திரையைப் பறித்தின்று நிலைகுலைய வைத்ததும் ஏன்?
பாசச் சுவடுகளில் முட்கள் படருமெனில்
பார்த்து நடந்திருப்பேன் அப்போதே! இனி
வேஷம் போட்டெனது வருத்தம் மறைக்கவெனில்
வெளிக்கொள்ளும் கண்ணீரே தடையாமோ?

வெளிச்சத்தில் நின்றாலும், குருட்டுக்கண் ஆனதினால்,
வெள்ளிகள் கூடவும் தெரியவில்லை!
துளிச்சத்தம் இல்லாமல் தொல்லைகள் கூடிடும்
விந்தையோ இன்னும் புரியவில்லை!
எழுந்திடும் விதியின் கை எழுதியே செல்லுமாம்!
அதிலுமோர் எழுத்தும் மாறாதாம்!
அழுதிடும் என் விழி நீர் என்று காய்ந்திடும்?
அதன் சுரம் என்று தான் மாறிடும்?

எத்தனை பாதைகள் என் முன்னே இருப்பினும்,
எது ஒளிப் பாதையாம் தெரியாதே!
பித்துறும் நிலையிலே என் மனம் ஆயினும்
பிறிதொரு வழியினைத் தேடுதே!
நித்தமும் ஏனிந்த நிலையெனக் கேட்கிறேன்!
நிம்மதிப் பதில் கொடு இறையே!
சத்தங்கள் ஓய்ந்ததோர் சாந்தியைத் தேடுறேன்!
சதிரிடும் மனச் சுமை குறையேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்புகள் செய்யாப் போதிலும் இங்கே
தவறியே போவதாய் ஆச்சோ?
அப்புறம், இப்புறம் திரும்பிடும் போதும்,
ஆயிரம் விழிகளின் பேச்சோ?
எப்படி என் வழி தெளிந்து நான் நடப்பேன்?
எனக்கு நான் ஆணைகள் ஏற்பேன்!
குப்புற விழுமுன் நிச்சயம் காப்பேன்!
குனிந்த பின் மீண்டுமே நிமிர்வேன்!

1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கவிதை

உற்றாரிவரென உள்ளம் நினைக்கையில்,
உள்ளேயவர் பல உண்மை மறைக்கையில்
முற்றாயறிந்து நான் பற்றொழித்துமே,
முழுமையாய் அதை அறிந்து திகைக்கையில்,
அற்றுப் போனதென் ஆசைகள் தேடி நான்
வெற்றுத் தாளினில் கோலம் போடையில்,
நெற்றிப் புருவ நெருப்பிடை முகிழ்த்ததென்
சிந்தனைக் கிறுக்கலில் செதுக்கிய கவிதை!

பட்டெனப் பலர் பேசிடும் பேச்சின்
வார்த்தைத் தாக்கலில் வதங்கிடும் போது,
முட்களாய்க் குத்தி என்னுயிர் துடித்து
முறுகிச் சிதைவதாய் உணர்ந்து தவிக்கையில்
உட்துயர் அடக்கி நான் உள்ளே அழுகையில்
ஊமையாய் மனக் குமுறல் தெறிக்கையில்
வெட்கும் என் மன வெளியில் விழுந்தது
விந்தை செய்வதாம் ஒரு புதுக் கவிதை!

தத்துவத்தின் வீச்செழுகின்ற,
தனிமைப் பொழுதின் தாக வேளையில்,
சத்தமில்லாச் சுந்தர எழுச்சியால்
சிலுசிலுக்கும் உணர்ச்சியடங்கிட
வித்தையறிந்து விளங்கி ஆழ்மனம்
விழுமியங்களை உணரும் போதினிலே
பித்தடைந்து பேனா கிறுக்கிய
சித்திரங்களாம் என் சிறு கவிதை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 AUG 2022

அக்கரைதனில் ஓடும் பறவையை,
அச்சிறகெழுப்பிடும் இனிய ஓசையை
பக்கம் வந்ததுமே பாய் விரித்திடும்
பசிய அலைகளின் ஈரத் தழுவலை
துக்கம் போக்கிடும் தூறல் மழையினைத்
தூவி மனம் தொடும் பனியின் சாரலை
இக்கணத்திலே இதயம் மீட்டதால்
இளைய நெஞ்சிலே புதிய கவிதையாம்!

வீக்கமுற்றுயிர் வெடித்துச் சிதைவதாய்
வீணர் பேச்சிலே வெம்பிப் போவதால்,
தேக்கமாகிடும் வாழ்வு என்றொரு
தேர்ந்த சிந்தனை என்னுள் கிளைத்ததால்
ஏக்கமுற்றொரு பாட்டுச் செய்திட
என்னுயிருள்ளே ஊற்றுச் சுரந்தால்,
தூக்கம் தொலைத்துப் பதித்த வரிகளாம்
துள்ளி வருகின்ற என் புதுக் கவிதை!

வெப்பக் காற்றினில் மேனி பொடிபட
வேர்த்துக் கடமையில் மூழ்கும் மனிதரை
செப்புச் சிலையெனும் உவமைக்குரியாள்
செந்நெல் வயல்தனில் சேற்றில் நடப்பதை
அப்பால் கடலெனும் நெடுவெளி ஓரம்
அனுதினம் தொடரும் மீன்பிடி ஒலியை
ஒப்புடன் பாடி உழைப்பினை ஏற்றும்
ஒளிகமழ் முத்தாம் என் புதுக்கவிதை!

1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே ஒன்று வருகிறது

ஆலைச் சங்கொலிக்க அதிவிரைவாய்த் துயில் கலைந்து,
கூலிக்குப் போகின்ற குடியீர்...! உமக்கெல்லாம்
சோலை இளங்காற்றுக் குளியல், அதைத் தொடர்ந்த
மாலைப் பொழுதின் மனமயக்கும் மலர்ப்பூங்கா, இத்தனையும்
மனம் ரசிக்க மாட்டாமல் வருந்தி உடல் களைத்துப்
பல துயரைப் பட்டாலும்,
சீலை முடிப்பினிலே சுற்றி வைத்த நாட் கூலி
சீவிக்கப் போதுமோ? சிரித்த நாளுண்டோ?

மே ஒன்று வருகிறது! மீண்டு மொருமுறை நாம்
ஏய்த்தவரைச் சாடி எரிமலையாய்ப் பீறிட்டுக்
கூக்குரலிற் கூவி ஓய்வோம்!

பச்சைப் பசும் பரப்பிற் பசுமைத் துளிர் வளர்த்து
மிச்சமில்லாமல் உயிர் பிழிந்து சாறெடுத்து
தேயிலை மொட்டுக்குள் தேக்கி அதை புகுத்தித்
தேவ பானமெனத் தருகின்றீர் எமக்கெல்லாம்,
உச்ச விளைச்சலுக்குப் பதிலென்ன உங்களுக்கு?
அச்சமுறைந்திருக்கும் அவலச் சிறு லயனோ...?

இறப்பர் மரம் வெட்டிச் சிரட்டையில் பால் திரட்டிப்
பொறுப்பாய் பல வேலை பக்குவமாய்ப் பார்த்து விட்டு
புறப்பட்டுச் சென்று உரிமைகளைக் கேட்டால்
மறுப்புண்டு; எதிர்க்க ஆளில்லை எனும் நினைப்பு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலைக்குப் பூமி தாளாது! இனியும் தடை எது?
இன்னல்கள் தீர்க்கமே ஒன்று வருகிறது!
சுரங்கத்தில் பூமித்தாய் அடிவயிற்றில் புகுந்து
இரவிரவாய் விழி திறந்து தூக்கத்தைத் தின்று
அரும்பும் கருவியர்வை தேகத்திற் கரைய - நிலக்கரிக்காய்
உருமாறி நிலத்தின் கீழ் வாழுகின்ற
உழைப்பாளித் தோழர்களே! உங்களை
சுரண்டிப் பெற்ற பணம் சீரழிக்கவென்று
விரலசைப்பில் விண்வெளியில் மிதக்கின்றார் இன்று!

மே ஒன்று வருகிறது! மீண்டு மொருமுறை நாம்
ஏய்த்தவரைச் சாடி எரிமலையாய்ப் பீறிட்டுக்
கூக்குரலிற் கூவி ஓய்வோம்!

1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

கோடை வெயிலெறித்துக் கொதித்துக் காய்கிறது
புழுதி மணல் பொரிந்து காலெரித்துச் சுட்டுவிட
மேனியோ வெம்பி வியர்வையில்,
குளித்து வழிகிறது!
உயிர்க்குள்ளே கேவலொன்று கிளம்பி
தாகமெனத் தடக்கி
விக்கி வெறு வெளியில்
வந்து விழுகிறது!

ஆச்சி அந்நாளில்
வெள்ளைத் தயிர் கடைந்து
வெண்ணெய் திரட்டி வைத்து
நுரையெழுந்து குபுகுபுக்க
குளிர்ந்த மோர் தந்த
இதமான ஞாபகத்தில்
வயிற்றில் குளிர் வந்து
எட்டிச் செல்கிறது!

அந்நாளில்
எலுமிச்சம் புளி கரைத்து
கொதிக்கின்ற காற்றுக்கும்
என்னுளத்தைக் குளிரவைத்த
அன்புள்ளம் எங்கென்று
இதயம் தவிக்கிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றென் பக்கத்தில் ஐஸ் வோட்டர் இருக்கிறது!
மேலே சுழல்கின்ற காற்றாடி அசைகிறது!
வளியைப் பதப்படுத்தும் பெட்டியும் தானுண்டு!
ஆனாலும்,
வெயில் கொளுத்தி எரிக்கிறது!
மேனியோ வெம்பி வியர்வையில் குளித்து வழிகிறது!
உயிர்க்குள்ளே கேவலொன்று
தாகமெனத் தடக்கி
விக்கி வெறும் வெளியில்
வந்து விழுகிறது!
1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தி மாலை

அந்தி மாலையில் மந்தமாருதம் சந்தணங் கமழ்கிறதே - தீச்
செந்தணல் போல் அந்த வான் மூலையில் பொன்னிறம் சிந்துதே!

மேற்றிசையோரம் மேவும் கதிரவன் மேனி துடைத்தனனே! - அந்த
மேன்மையிற் குளித்த பூமி ஒரு கணம் காற்றில் குளித்ததுவே!

ஆர்த்திடும் கடலலை வீரர்கள் அடித்திடும்
போர்ப்பறைச் சத்தங்களோ? - உயிர்
கோர்த்திடும் காலனும் கடலெனும் வடிவில்
காத்துக் கிடப்பவனோ?

சின்னவர் கைகளில் நாளைய அழகாய்
வண்ணம் மிளிர்கிறதே! - பார்
மின்னும் கடலலை, மேலேறி வந்தே,
சிற்றில் சிதைக்கிறதே!

தங்கப் பால் நிலா எங்கள் வானிலே
சங்கப்பாடல் போல் வருமே! - தேன்
தங்கும் மாலையாய், இன்பம் காட்டியே
பொங்கும் கவிதைகள் தருமே!

வண்ணங் குழைத்திடும், எண்ணம் சிலிர்த்திடும்
இனிய பொழுதே அந்தி - இனி
திண்ணம் நாளையும் மீண்டுமொருமுறை
இன்று போல் வந்து சந்தி!

1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

### சிறுகதைத்தொகுதி

1. ஒரு மரணமும் சில மனிதர்களும் - 2005
   (ஞானம் விருது)

2. இளவேனில் மீண்டும் வரும் - 2007
   (வடமாகாண விருது)

3. தூரப்போகும் நாரைகள் - 2008

4. அங்கயற்கண்ணியும் அவள் அழகிய உலகமும் - 2011
   (அரச இலக்கிய விருதுக்கான பரிந்துரை, யாழ் இலக்கிய வட்டம்
   இலங்கை இலக்கியப் பேரவை சான்றிதழ்)

5. ஒன்பதாவது குரல் - 2019
   (அரச இலக்கிய விருது)

6. வெண்சுவர் - 2021

### ஆன்மிக நூல்

1. கடவுளோடு பேசுதல் - 2009

13868 cc பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிதை ஒரு இளவரசி போல நான் அணுக முடியாத் தூரத்தில் எப்போதும் இருப்பதாகவே எனக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. எழுதிய கவிதைகள் எங்கெங்கோ சிதறிக் கிடந்தன. எனது கவிதைகளை நானே திரும்பிப் பார்க்க வில்லை. வாழ்க்கை ஓய்வொழிச்சலின்றி என்னை எங்கெங்கோ இழுத்துச் சென்று கொண்டிருந்தது. எதிர்பாராத கோவிட் நோய்த்தொற்று பதின்நான்கு நாள்களுக்கு என்னை நாலு சுவர்களுக்குள் முடங்க வைத்தபோது, கவிதை இளவரசி சாவதானமாய் என்னோடு பேசத் தொடங்கினாள். இதுவரைக்குமான எனது கவிதைகள் எங்கே? மனது பதறத் தேடத் தொடங்கினேன். இதுகாலவரையில் எழுதித் தீர்த்த கவிதைகளை வடிகட்டியெடுத்தேன். எழுத்தின் அலைவரிசையில் எனக்கான முதல் அங்கீகாரம் கவிதையல்லவா? இத்தனை ஆண்டுகளிலும் யாருக்காகவோ பெய்து கொண்டிருந்த மழைத்திவலைகளில் என் கரங்களில் அள்ள முடிந்தவற்றை அள்ளியெடுத்திருக்கிறேன். அவற்றைப் பருகும் போது உங்களுக்கு மழையின் சுவை கிடைப்பின் என்னைப் பாக்கியசாலி என்பேன்.

– தாட்சாயணி

ISBN 978-624-5881-25-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org